பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 26 செவ்வாய்க்கிழமை (12-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:322

# தமிழ்க் கூட்டமைப்பினருக்கு எதிராக மல்வத்தை பீட வாசலில் ஆர்ப்பாட்டம்



## பீடாதிபதியைச் சந்தித்து விட்டு திரும்பிய சமயம் நடந்த குழப்பம்

கண்டி,ஒக்ரோபர்12

**மல்வத்தை மகாநாயக்கரைச் சந்தித்துப் பேசுவதற்காகக் கண்டிக்குச் சென்ற தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அங்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஜாதிக ஹெல உறுமயவின் பிக்குகளும் ஜே.வி.பியின் நாட்டுப்பற்றாளர் இயக்க உறுப்பினர்களுமே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மல்வத்தை வளாகத்தில் இருந்து தமிழ் எம்.பிக்கள் வெளியேற முடியாமல் வீதியில் படுத்து மறியலிலும் அவர்கள் ஈடுபட்டனர்.**

தற்போதைய அரசியல் நிலை மற்றும் விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்பன பற்றி மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளுடன் சந்தித்துப் பேசுவதற்குத் தமிழ்க் கூட்டமைப்பு நேரம் குறித்திருந்தது. இதற்காக நேற்றுக் காலை தமிழ் எம்.பிக்களான இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவநாதன் கிஷோர், விநோதராதலிங்கம், சிவாஜிலிங்கம், கனகசபை பத்மநாதன், தம்பாப்பிள்ளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாழடைந்த வீட்டில் பதுங்கியிருந்த கருணா குழுவினர் மீது நேற்றுத் தாக்குதல்!

### இருவர் பலி; ஐவர் படுகாயம்

மட்டக்களப்பு,ஒக்.12

மட்டக்களப்பு - பொலன்னறுவை வீதியில் உள்ள நாகதென்ன என்ற இடத்தில் இருந்த பாழடைந்த வீடு ஒன்றுக்குள் வைத்து கருணா குழுவைச் சேர்ந்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 5 பேர் படுகாயமடைந்தனர்.

வெலிகந்தவுக்கு அருகிலுள்ள இந்த இடத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர். எனினும், காயமடைந்தவர்கள் நேற்றுக் காலையே மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். உயிரிழந்தவர்களின் சடலங்களும் அதன் பின்னரே மீட்கப்பட்டன.

இந்தத் தாக்குதலுக்குப் புலிகள் உரிமை கோரியிருக்கின்றனர். இது தொடர்பாகப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கருணாவின் மார்க்கன் குழுவினர் இருவர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டதுடன், நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

சென்ற 05-10-2004 செவ்வாய்க்கிழமை இரு

(16ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாண உறுப்பினர் கொள்ளுப்பிட்டியில் நேற்றிரவு சுட்டுக்கொலை!

மேல் மாகாண சபையின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் நாமல் குணவர்த்தன நேற்றிரவு 8.40 மணியளவில் கொழும்பு கொள்ளுப்பிட்டி தர்மராஜ மாவத்தையில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமது 'கப்' வாகனத்தில் வந்துகொண்டிருந்த அவரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## 51 ஈழ அகதிகள் மன்னார் வருகை

மன்னார்,ஒக்.12

தமிழகத்தில் இருந்து 51 ஈழ அகதிகள் நேற்று மன்னாருக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

மன்னார், தலைமன்னார், திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்கள் மீன்பிடி வள்ளங்களில் மன்னாரை வந்தடைந்துள்ளனர். இவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். (ஐ-3)

ஊர்காவலரை விடுவிக்கச் செய்ய

## சிங்கள அமைப்பு அரசுக்கு வழங்கிய காலக்கெடு முடிவு!

### சாலை மறியல், ஹர்த்தாலுக்கு முஸ்தீபு

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட ஊர்காவலர்கள் இருவரை விடுதலை செய்யும் நடவடிக்கைகளை அரசு எடுப்பதற்கு வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு அரசுக்கு விடுத்த காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது. ஊர்காவலர்கள் விடுவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இன்று முதல் திருகோணமலை பகுதியில் சாலை மறியலில் ஈடுபடப் போவதாகவும், ஹர்த்தால் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகவும் அந்த அமைப்பு அறிவித்திருப்பதால் திருமலைப் பகுதியில் பதற்றம் நிலவுகின்றது.

சாலை மறியலினால் திருகோணமலை - கொழும்பு போக்குவரத்துப் பாதை தடைப்படும் ஆபத்து உள்ளது.

அவ்வாறு ஏற்பட்டால் திருகோணமலை பிரிமா

(16ஆம் பக்கம் பார்க்க)

## 10 இந்திய மீனவர் வடக்குக் கடலில் கைதாகினர்

யாழ்ப்பாணம்,ஒக்.12

இந்திய மீனவர்கள் 10 பேர் காங்கேசன் துறைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களிடம் இருந்து ஜெலிக்நைட் வெடிபொருள்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்தில் இருந்து தொண்டிக்கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்காகப் பத்து மீனவர்கள் நேற்றுமுன்தினம் புறப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் மீன்பிடிப்பதற்காக ஜெலிக்நைட், டைனமட் ஆகிய வெடி பொருள்களுடன் சென்ற இவர்கள் திசைமாறி இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசித்து விட்டனர் என்று விசார

(16ஆம் பக்கம் பார்க்க)

## கரகாட்டம், கும்மி, காவடியுடன் பாரம்பரிய இசை முழங்க பண்பாட்டுப் பேரணியுடன் சிறப்புற்ற தமிழ் இலக்கிய விழா!

யாழ்ப்பாணம்,ஒக்.12

தமிழரின் கலை, கலாசாரப் பாரம்பரியங்களைச் சித்திரிக்கும் வகையிலான பண்பாட்டுப் பேரணி மற்றும் ஆளுநர் விருது வழங்கல் ஆகிய வைபவங்களுடன் தமிழ் இலக்கிய விழா நேற்று எழுச்சி விழாவாக நடந்தேறியது.

மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வந்த வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவின் இறுதிநாள் நிகழ்வை ஒட்டியே நேற்றுப் பண்பாட்டுப் பேரணி இடம்பெற்றது.

பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமான இந்தப் பண்பாட்டுப் பேரணி அரசடி வீதி வழியாகக் கந்தர் மடம் வீதியை வந்தடைந்து அங்கிருந்து இந்து மகளிர் கல்லூரியைச் சென்றடைந்தது.

இந்தப் பண்பாட்டுப் பேரணியில் தமிழர்களின் பண்பாட்டு வாத்தியங்களான பறை, உடுக்கு, மத்தளம் மற்றும் மேளம், நாதஸ்வரம், புல்லாங்குழல் என்பனவற்றின் இசையும் -

பாரம்பரிய கலைகளான கரகாட்டம், சிலம்படி, காவடி, கும்மி போன்றனவும் - இடம்பெற்றன.

சிறுவர்களும் முதியவர்களும் இணைந்து கலைகளை அபிநயம் செய்தனர்.

பேரணியின் நடுவில் தமிழ்த்தாயின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி நகர்ந்து வந்தது.

இந்தப் பேரணியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் மற்றும் விழாவுக்கு அழைக்கப்பட்ட பேராளர்கள் கலந்துகொண்டனர்.

பேரணி சென்ற வீதியின் இருமருங்கிலும் மகர தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

வீதியின் இருமருங்கும் கூடி நின்ற மக்கள் பேரணியைக் கண்டு ரசித்தனர்.

பண்பாட்டுப் பேரணி அரங்கினை வந்தடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின. மங்கள விளக்

(16ஆம் பக்கம் பார்க்க)




பண்பாட்டுப் பேரணியின் காட்சிகள்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வவுனியா கல்வியியற் கல்லூரி மாணவர் மத்தியில் தொற்றுநோய்

## மூன்று வாரங்களுக்கு மூடும்படி அறிவுறுத்து

வவுனியா,ஒக்.12

வவுனியா கல்வியியற் கல்லூரியை மூன்று வாரங்களுக்கு மூடும்படி வவுனியா சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

கல்வியியற்கல்லூரியில் நிலவும் சுகாதாரச் சீர்கேடு காரணமாக அங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

கல்லூரியின் மலசலகூடத்தின் கழிவுகள் வெளியில் கசிவு ஏற்பட்டு இருப்பதன் காரணமாக அங்கு கல்வி பயின்றுவரும் மாணவர்களில் பலர் வயிற்றோட்ட நோய்க்கு பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று கூறப்பட்டது.

70 இற்கு மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் வயிற்றுளைவு காரணமாக வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவும் நேற்றுக்காலையும் அதிகளவானவர்கள் அனுமதிக்கப்பட்டதன் காரணமாக நோயாளர் விடுதியில் இடபற்றாக்குறை ஏற்பட்டு இருப்பதாக வவுனியா பொது மருத்துவனையின் வைத்திய அத்தியட்சகர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இந்த நோயின் பாதிப்புக்குள்ளான மாணவர்கள் தொடர்சியாக வவுனியா பொது மருத்துவமனையிலும் தனியார் மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இது தொடர்பாகக் கல்வியியற் கல்லூரியில் தொடர்புகொண்ட போதும் தொடர்புகள் எதுவும கிடைக்கவில்லை. நேற்றுமாலை வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பலரும் வீடுகளுக்குச் சென்று விட்டனர். வவுனியா சுகாதாரப் பிரிவின் வைத்திய குழுவினர் அங்குள்ள சுகாதார நிலைகள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர். (3-164)

# நோர்வே அதிகாரிகள் இன்று யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.12

குடாநாட்டில் இயங்கும் நோர்வே அரசசார்பற்ற நிறுவனமான 'நொறாட்' மேற்கொண்டு வரும் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக நோர்வேத் தூதரக முதலாவது செயலாளர் தலைமையிலான குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

இக்குழு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். அரச அதிபரையும் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாநகர சபை ஆணையாளர், நியாப் திட்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

'நொறாட்' மேற்கொண்டுவரும் திட்டங்களின முன்னேற்றம் குறித்தும் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இச்சந்திப்பில் ஆராயப்படும். (3)

# மல்லாகம் நீதிமன்றக் கட்டடம்: புனரமைப்பு விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது முழுமையாகச் சேதமடைந்த மல்லாகம் நீதிமன்றக் கட்டடம் மீளப்புனரமைக்கப்படவிருக்கின்றது.

இக்கட்டடப் பணியை மேற்கொள்ள உலக வங்கி 8 கோடி 50 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

கட்டடப் பணிகளை ஆரம்பிப்பதற்கான அனுமதியை புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு யாழ்.செயலகத்துக்கு வழங்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து கட்டட மதிப்பிடும் பணிகளை மேற்கொண்ட பின்னர் கேள்விப் பத்திரத்தை யாழ்.செயலகம் கோரவிருக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா சேதமடைந்த கட்டடத்தைப் பார்வையிட்டிருந்தார் என்பதும் -

விரைவில் கட்டட வேலைகள் ஆரம்பமாகும் என அவர் உறுதியளித்திருந்தார் என்பதும் - குறிப்பிடத்தக்கவை. (3)

# புலிகள் விடுவிக்கக் கோரிய 10 பேரில் எண்மர் பிணையில்!

கொழும்பு,ஒக்.12

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட இரு ஊர்காவலர்களையும் விடுவிப்பதற்குப் பதிலாக அரசுத் தரப்பினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பத்து புலிகள் உறுப்பினர்களை விடுவிக்க வேண்டும் - என்று புலிகள் கேட்டிருக்கின்றனர்.

ஆனால், விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பத்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களில் எட்டுப் பேர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

எஞ்சிய இருவரையும் பிணையில் விடுவிக்கக் கோரும் மனுக்கள் நேற்று நீதிமன்றத்தில் எடுக்கப்படவிருந்தன. சம்பந்தப்பட்டோர் நேற்றுப பிணையில் விடுவிக்கப்படாவிட்டால், மாற்று ஏற்பாடுகள் குறித்தும் நிலைமை குறித்தும் பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் இன்றுகூடி ஆராயும்.

உள்துறை அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

நேற்று உள்துறை அமைச்சில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

திருகோணமலையில் விடுதலைப் புலிகளால கைதுசெய்யப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரையும் விடுவிப்பதற்காகச் சமாதானச் செயலகத்தின் ஊடாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. விரைவில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்புகிறேன்.

அரசு அவர்கள், இருவரையும் விடுவிப்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இருப்பினும், விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் - கோரிக்கை நியாயமற்றது - என்றும் அவர் கூறினார். (ஐ-க-3)

# ஜனாதிபதியின் ஆலோசனைக் கவுன்ஸிலில் தமிழ்க் கூட்டமைப்பினர் பங்குபற்றவேண்டும்

## மல்வத்தைப் பீடாதிபதி தெரிவித்த ஆலோசனை

கண்டி,ஒக்.12

"பெரும் பிரச்சினைக்கும் அழிவுக்கும் உட்படுத்தப்பட்டுள்ள இந்த நாட்டில், சமாதானத்தையும் ஐக்கியத்தையும் நிலைநாட்ட ஜனாதிபதியினால் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள தேசிய சமாதான ஆலோசனைக் கவுன்ஸில் நடவடிக்கையில் நீங்களும் ஈடுபடவேண்டும். ஐ.தே.கட்சியும் ஏனைய எல்லா அமைப்புக்களும் இணைந்து மேற்கொள்ளப்படும் தீர்க்கமான முடிவுகளின் அடிப்படையிலேயே இந்த நாட்டின் எதிர்காலம் குறித்து நம்பிக்கை வைக்கலாம்" என மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கள தேரர் தம்மைச் சந்தித்து உரையாடவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

நேற்றுக்காலை இந்தச் சந்திப்பு மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

இரா.சம்பந்தன் எம்.பி. தலைமையில் வந்த இந்தக் குழுவில் சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம், எஸ்.கனகரத்தினம், கனகசபை பத்மநாதன், சிவநாதன் கிஷோர், எல்.வினோதராதலிங்கம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அங்கு மகாநாயக்கர் தொடர்ந்தும் கூறியதாவது:-

நீங்கள் தெரிவித்த அழிவுகளை நாம் செய்யவில்லை. அவற்றை எல்லாம் நாம் நன்கு அறிவோம். இன்று அவற்றை மறந்து ஆக்கபூர்வமான பணிகளைத் தொடருவோம். ஜனாதிபதி முன்னெடுத்துள்ள சமாதான ஆலோசனைக கவுன்ஸில் மூலம் அனைவரினதும் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளமுடியும். எனவே தான் அனைவரையும் அவர் அழைத்திருக்கிறார். ஐ.தே. கட்சி இதனைப் புறக்கணித்துவிட்டது. எனவே, நீங்களும் அவ்வாறு செய்யாமல் இந்தச் சபை முன்பாக உங்களின் கருத்துக்களையும் முன்வைக்கலாம்.

இவ்வாறான பிரச்சினைகள் அனைத்துமே வடக்கில்தான் இடம்பெறுகின்றன. நாம் வாழும் இப்பிரதேசத்தைப் பாருங்கள். அனைத்து இன மக்களும் சகோதரர்கள். அன்பாகப் பழகுகிறார்கள். இங்கு பிரச்சினைகள் இல்லை. சமாதானமே வாழ்வு.

1970 ஆம் ஆண்டில் நான் யாழ். சென்றிருக்கின்றேன். இன்று பல உயிர்கள் பலியெடுக்கப்படுகின்றன. பத்திரிகையைப் படித்தால் இது நன்கு புலனாகும். டக்ளஸின் ஆள்கள் பலர் கொல்லப்படுகின்றார்கள். ஏன் இவற்றைத் தொடர வேண்டும்? நீங்கள் கூறுவது போன்று அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேருவதன் மூலமே நீண்ட நாள் துயரத்திற்கு முடிவு காணமுடியும்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கி இரா. சம்பந்தன் எம்.பி. மகாநாயக்கருக்கு நீண்ட விளக்கத்தைக் கொடுத்தார். அப்போது சம்பந்தன் கூறியதாவது:-

இந்நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னரே பிரச்சினைகள் தொடங்கின. இருபது வருட கால யுத்தம் நாட்டை சின்னாபின்னமாக்கிவிட்டது. வடக்கு மற்றும் தெற்கையும் அது பாதித்தது. அகதிகளாக்கப்பட்டோர் பலர். சுமார் 7 லட்சம் பேர் வடக்கில் இன்னமும் வாழ வழியினறித் தவிக்கின்றனர். பாதைச் சீர்கேடும், பாடசாலைகள் தகர்ப்பும் மாணவர்களின் கல்வியைப் பாதித்துவிட்டன. அங்கு மின்சாரம் கிடையது. நீங்களும் அங்கு நேரடியாக வந்து பார்த்தால் உங்களுக்கும் நிலைமை நன்கு புரியும். நீங்கள் வாருங்கள். பாதுகாப்புத் தருகின்றோம். அங்கு ஜனாதிபதியோ, பிரதமரோ, எதிர்க்கட்சித் தலைவரோ காலடி வைக்கவில்லை. கடந்த இருபது வருடமாக இடம்பெற்ற கோர யுத்தத்தின் அழிவுகளை உங்களுக்கு சொல்லிவிளங்க வைக்க இயலாது.





இன்றைய நிலையை மாற்றி அமைக்க வேண்டுமானால் முதலில் புலிகளுக்கும் அரசுக்கும இடையில் பேச்சை ஆரம்பிக்க வேண்டும். நாட்டைத் துண்டாடாத முறையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். இந்நாட்டு மக்களின் அபிப்பிராயமும் அதுவே. இப்பேச்சுக்களை ஆரம்பித்துவைக்க உங்களுக்கு மிகுந்த அதிகாரம் உண்டு. உங்களின் கருத்துக்களை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

உங்களின் திறந்த நல்லெண்ணம் குறித்து நாமும் திருப்பதியும் மகிழ்ச்சியும் அடைகிறோம். எனவே, உங்களின் பங்களிப்பு இவ்விடயத்தில் பெரிதும் நன்மை பயக்கும் என்பதே பலரது அங்கலாய்ப்பாகும்.

எமது நாட்டுக்குள்ளே பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்வதில் காட்டப்படும் முயற்சி நேர்மையும் நியாயமும் உடையதாக அமைதல் வேண்டும்.

கடந்த இரு வருடங்களாக யுத்தநிறுத்தம் நிலவுகின்றது. புலிகளும் அதற்கு இணங்கி யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள். தமது பிரதேசங்களை எவ்வாறு நிர்வகிக்கலாம் என அவர்கள் ஆராய்ந்து வருகின்றார்கள்.

நாம் அனைவருமே 50 ஆண்டு காலமாகத் தவறுகளை இழைத்துவிட்டோம். இவற்றைத் தொடரவிட வேண்டுமா? சமாதானம் தொடர்பாக ஜனாதிபதி உட்படப் பலருடன் பேசி உரையாடி இருக்கின்றோம். கண்ட பலன் எதுவுமில்லை. இன்று இந்தப் பேச்சுக்களை இழுத்தடிக்கவே பலர் கருதுகின்றனர்.

ஒஸ்லோ உடன்பாட்டின் அடிப்படையில் பேச்சைத் தொடரவேண்டும்.

உலக நாடுகளின் உதவியுடன் முதலில் தமிழர் தாயகப் பிரதேச மக்களின் சகஜ வாழ்வுக்கு வகைசெய்யவேண்டும். இந்த அடிப்படையில் பேச்சுத் தொடருமானால் ஐ.தே.கட்சியின் ஆதரவும் இதற்குக் கிடைக்கும்.

புலிகளுடன் நேரடியாகப் பேசுவதே சிறந்த வழியாகும்.

இன்றைய சமாதான முன்னெடுப்புகளைப் பின்தள்ளிவிடக் கருதினால் அது பாரதூரமான விளைவுகளை உருவாக்கிவிடும்.

தந்தை செல்வா இந்த நாட்டைப் பிரிக்க முயலவில்லை. ஆனால், பின்னர் அவரும் தமது நிலைப்பாட்டிலிருந்து மாறவேண்டிய சூழ்நிலை உருவாகக் காரணம் தமிழ் மக்கள் மீது காட்டப்பட்ட பாகுபாடாகும். புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு ஊக்குவிக்க உங்களால் முடியும்.

தெற்கில் வாழும் சிங்கள மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. அனைத்து மக்களும் அமைதியாக வாழக்கூடியதாக - நாட்டைத் துண்டாடாத நிலையில் - பிரச்சினைக்குத் தீர்வுகாண நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டிய நிலையைத் தட்டிக்கழிக்க இயலாது.

இதனைத் தொடர திறந்த நல்லெண்ணமே தேவை. எம்மை இங்கு வரவழைக்கத் தூண்டியதும் உங்களின் தாராள நல்லெண்ணமும் உறுதியான நிலைப்பாடுமேயாகும் எனவே, உங்களின் பங்களிப்பே எல்லாவற்றையும்விட மேலானதாகும் - என்றார் சம்பந்தன்.

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. அங்கு கூறியதாவது:-

உங்களைச் சந்திப்பதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். நாம் யுத்தத்தை விரும்புபவர்கள் அல்லர். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்படலாம். நாட்டைப் பிரிக்கவே சமாதான முயற்சி எனக் கருதுவது பொருத்தமில்லை. சமஷ்டி ஆட்சி அடிப்படையில் இப்பிரச்சினைக்குத தீர்வு காணலாம். அப்போதே அமைதியாக அனைவரும் வாழலாம்.

கடந்த இரண்டரை வருடங்களாக நிலவும் அமைதியின் ஊடாக உரியபலனைப் பெற முயல வேண்டும். ஐ.தே.கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. எல்லாமே சமாதான முயற்சிகளை முன்னெடுக்க உதவுகின்றன. யுத்தத்தை அனைவருமே வெறுப்பதால் சமாதான முயற்சியை முன்னெடுக்க நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டிய கால கட்டம் இது.

- இப்படி அவர் கூறினார்.

### சிவாஜிலிங்கம்

எம்.கே.சிவாஜிலிங்கம் தமது உரையில் கூறியதாவது:-

"சமாதானப் பேச்சுக்கள் இப்போது முன்னெடுக்கப்படாது போயின் புலிகளை ஒரு போதும் வெல்ல இயலாது. சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிப்பது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கிவிடும். டக்ளஸ் தேவானந்தாவின் ஆள்கள் மாத்திரம் அல்ல, புலிகள் தரப்பிலும் ஆளகள் கொல்லப்படுகிறார்கள். உலக நிதியுடன் வடக்கையும் - கிழக்கையும் கட்டியெழுப்ப உருவாக்கப்பட்ட ஒஸ்லோ திட்டம் உடனடியாக ஆராயப்படவேண்டும். இதன் அடிப்படையிலேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். பேச்சுக் கதவு மாத்திரம் திறக்கப்பட்டால் போதாது. ஜன்னல்களும் திறக்கப்பட வேண்டும்."

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-க-3)

# ஈராக்கிய ஷியா கிளர்ச்சியாளர்களின் ஆயுத ஒப்படைப்பு நேற்று ஆரம்பம்!

பக்தாத்,ஒக்.12

ஈராக்கிய அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அடுத்து ஈராக்கிய ஷியா கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதங்களைக் கையளிக்க ஆரம்பித்துள்ளார்கள். பக்தாத்தில் நேற்று இந்தக் கையளிப்பு நடவடிக்கை ஆரம்பமானது.

கடந்த ஆறு மாதங்களாகத் தொடர்ந்து வந்த கடும் மோதல்களுக்குப் பின்னர் இந்த ஆயுதக் கையளிப்பு இடம்பெறுகின்றது. ஐந்து நாள்களாக இதற்கான எதிர்பார்ப்பு நிலவி வந்தது எனினும் நேற்று அது சாத்தியமானது.

ஈராக்கிய அரசுக்கும் ஷியா கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் குறித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டது.

ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் நிலைகொண்டதன் பின்னர், ஷியா முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவரான மொக்ரடா அல் சதாரின் தலைமையிலான கிளர்ச்சியாளர்கள் அவர்களுக்கு எதிராக வன்முறைப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதனால் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர்.

புனித நகரங்களான சதார் மற்றும் நஜப் ஆகியவற்றில் கடும் மோதல்கள் இடம்பெற்று வந்தன. இந்த மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஈராக்கிய அரசு கிளர்ச்சியாளர்களுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி கைதுசெய்து அடைத்து வைக்கப்பட்டுள்ள சதார் மெஹுடியா இராணுவத்தின் உறுப்பினர்களை விடுவிக்க ஈராக்கிய அரசு இணங்கியுள்ளது என்று மொக்ரடா சதார் தெரிவித்தார்.

இதற்குப் பதிலாக மெஹுடியா இராணுவம் அமெரிக்கப் படையினர் மீதும் ஈராக்கியப் படையினர் மீதும் நடத்தி வரும் தாக்குதல்கள் நிறுத்தப்படும். அத்துடன் கிளர்ச்சியாளர்கள் வசம் இருக்கும் நடுத்தர மற்றும் பெரிய ஆயுதங்களும் ஈராக்கிய அரசிடம் ஒப்படைக்கப் படும்.

அதேசமயம், சண்டையால் சிதைந்துபோய்க் கிடக்கும் புனித நகர்களைச் மறுசீரமைக்க வசதியாக ஈராக்கிய அரசு 50 கோடி அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கும்.

இதற்கிடையில், ஈராக்குக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட், ஈராக்கில் வன்முறைகள் அதிகரித்தால் ஜனவரியில் தேர்தலை மோசமாகப் பாதிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

எந்தவித முன்னறிவிப்பும் இன்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை ரம்ஸ்பீல்ட் இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தார். (க-8)

## எண்ணெய்த் தொழிலாளர்கள் நைஜீரியாவில் பணி நிறுத்தம்

லண்டன்,ஒக்.12

ஆபிரிக்காவின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான நைஜீரியாவில் எண்ணெய் விலையை அதிகரிக்கக் கோரி நான்கு நாள் பொது வேலைநிறுத்தம் நேற்று ஆரம்பமானது.

நாட்டின் மிகப்பெரிய தொழிலாளர் அமைப்பான தொழிலாளர் காங்கிரஸ் இந்த வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. உடனடியாக 25 வீதத்தினால் எண்ணெய் விலை அதிகரிக்கப்படவில்லையானால் வேலை நிறுத்தம் மேலும் தொடரும் என காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவின் பெரும்பான்மையான மக்கள் வறுமையில் வாடினாலும் அங்குள்ள எண்ணெய் குறைந்த விலைக்கே விற்கப்படுகின்றது. இதனால், குறிப்பிட்ட வெளிநாட்டு நிறுவனங்களே கொள்ளை லாபம் அடைகின்றன.

இந்த வேலைநிறுத்தத்தால் உலக சந்தையில் எண்ணெயின் விலை மேலும் அதிகரிக்கும் சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன.

எண்ணெய் விலையை அதிகரிக்கக்கோரி கடந்த 18 மாதங்களில் மூன்றாவது முறையாக இந்த வேலைநிறுத்தம் நடக்கின்றது. (க-8)

## பங்களாதேஷில் வேலைநிறுத்தம்: இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

டாக்கா,ஒக்.12

பங்களாதேஷில் பிரதமர் காலிதா ஷியாவின் அரசு அரசமைத்து மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையைக் கண்டித்தும், அவரின் தலைமையிலான அரசை எதிர்த்தும் எதிர்க்கட்சியான அவாமி லீக் நேற்றுமுன்தினம் வேல்லைநிறுத்தத்தில் ஈடுபட்டது.

இதனால், நாட்டில் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிப்படைந்தது. வர்த்தக நிறுவனங்கள், கடைகள், தனியார் அலுவலகங்கள், பாடசாலைகள் என்பன மூடப்பட்டிருந்தன. டாக்கா உள்ளிட்ட பல நகரங்களில் இராணுவத்தினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அத்தோடு, அவாமி லீக் கட்சியின் ஆதரவாளர்கள் மறியல் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். (க-8)

# ஆப்கானிஸ்தானுக்கு இந்தியா அனுப்பிய உதவிப்பொருள்கள் பாகிஸ்தானால் முடக்கம்

## நடவடிக்கையை ஐ.நா. உதவிக் குழுத் தலைவர் கண்டிப்பு

புதுடில்லி,ஒக்.12

போரினால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் மக்களுக்கு உதவும் பொருட்டு இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தியா அனுப்பிய 10 ஆயிரம் தொன் பிஸ்கட்டுக்கள் மனிதாபிமானமற்ற செயலால் இன்றும் போய்ச்சேராமல் அவைகள் கெட்டுவிட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசப் பயங்கரவாதியாகச் சித்திரிக்கப்படும் ஒஸாமா பின்லேடனைப் பிடிப்பதற்காக ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர்தொடுத்தது. இந்தப் போரினால் அந்நாடு சீரழிந்துள்ளது. போரால் பாதிக்கப்பட்ட ஆப்கான் மக்களுக்கு உதவ உலகின் பல நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கிவருகின்றன. அந்த நாடுகள் வழங்கும் உதவிப் பொருள்கள் பாகிஸ்தான் வழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

உலக உணவுத் திட்டத்தின் அடிப்படையில் செய்யப்படும் இதுபோன்ற உதவியை இந்தியாவும் செய்யவேண்டும் என ஐ.நாவால் வேண்டப்பட்டது. அதற்கிணங்க கடந்த 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆயிரம் தொன் எடை கொண்ட பிஸ்கட்டுகளை இந்தியா அனுப்பிவைத்தது.

ஆனால், இந்த பிஸ்கட்டுகள் இன்றும் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையைத் தாண்டவில்லை. இரண்டு வருடமாக அவை பாகிஸ்தானில் உள்ள கிட்டங்கியில் வைக்கப் பட்டுள்ளன.

இந்திய முத்திரை குத்தப்பட்ட பொருள்களையோ அல்லது இந்திய லொறிகளையோ பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையைத் தாண்ட அனுமதிக்கமுடியாது என பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது. இதனால், இரண்டு வருடங்களாக பிஸ்கட்டுக்கள் ஒரே இடத்தில் கிடந்தமையால் ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் கெட்டுப்போயுள்ளன.

உதவிப் பொருள்கள் அனைத்தும் தங்கள் நாட்டு இராணுவ டிரக்குகளில்தான் ஏற்றிச் செல்லப்படவேண்டும். அத்தோடு அந்த உதவிப் பொருள்கள் மீது இந்திய நாட்டின் முத்திரை இருக்கக்கூடாது என்று பாகிஸ்தான் கண்டிப்பான உத்தரவை பிறப்பித்திருப்பதால் இந்தியாவின் உதவி தடைப்பட்டுப்போனது.

அத்தோடு, ஐ.நாவின் வாகனங்களுக்குக் கூட தமது நாட்டு எல்லையைக் கடந்து செல்ல பாகிஸ்தான் அனுமதி அளிக்க மறுத்துவருகிறது. இதனால் இந்தியா சார்பில் புதிதாக பிஸ்கட் உட்பட பல்வேறு உதவிப் பொருள்கள் மீண்டும் வழங்கப்படவுள்ளன. இவற்றை உலக உணவுத் திட்ட அமைப்பினர் தங்களின் லொறிகளிலேயே ஏற்றிச் செல்லவும் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையை ஆப்கானிஸ்தானில் போரால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவி செய்யவென பணியாற்றிவரும் ஐக்கிய நாடுகள் சபையின் உதவிக் குழுவின் தலைவர் ஜீன் ஆர்னல்ட் வன்மையாகக் கண்டித்துள்ளார். (க-8)

# இந்தியாவின் அஸாமில் வெள்ளம்; இதுவரை 119 பேர் உயிரிழப்பு!

கவுகாத்தி,ஒக்.12

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கில் இதுவரை 119 பேர் பலியாகியுள்ளனர். ஹெலி கொப்டர்கள் மூலம் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன.

அஸாம் மாநிலம் கோல்பாரா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்த பலத்த மழை காரணமாக அங்கு வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் உள்ள மேகாலயா மாநில மலைப் பகுதியில் இருந்து சீறிப்பாய்ந்து கொண்டுவரும் கட்டுக்கடங்காத வெள்ள நீரினால் அஸாம் மாநிலம் கோல்பாரா மாவட்டத்தில் பெரும் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இந்த வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளன. தொடரும் இந்த வெள்ளப் பெருக்கினால் பல்லாயிரக்கணக்கான வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இரவுநேரத்தில் வெள்ளம் அதிகரித்தமையால் ஏராளமானவர்களை வெள்ளம் இழுத்துச் சென்றுவிட்டது.

கோல்பாரா மாவட்டத்தில் இதுவரை வெள்ளத்தில் மூழ்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 119ஆக உயர்வடைந்துள்ளது. ஓரளவு வெள்ளம் வடிந்ததும் மரங்களின் கிளைகளிலும் வீட்டுக் கூரைகளிலும் சிக்கியுள்ள சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. (க-8)



# லாகூர் மசூதியில் குண்டு வெடிப்பு 7 பேர் உயிரிழப்பு! 20 பேர் காயம்!!

லாகூர்,ஒக்.12

பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள ஷியா முஸ்லிம்களின் மசூதியில் நேற்று வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 7 பேர் பலியாகினர். மேலும் 20 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் தற்போது தற்கொலைத் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. ஷியா மற்றும் சுனி இன முஸ்லிம்கள் இடையேயான மார்க்க முறுகல் நிலையே இந்தத் தாக்குதல்களுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கலவரங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர்.

கடந்த 3ஆம் திகதி சியோஸ் கோட் நகரில் ஷியா முஸ்லிம் மசூதியில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் 41 பேர் பலியாகினர். இதற்குப் பதிலடியாக முல்தான் நகரில் நடந்த மத ஊர்வலத்தின் இறுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் லாகூரில் தற்கொலைத்தாக்குதல் இடம்பெற்றது. மசூதியில் தொழுகை இடம்பெற்றுக்கொண்டிருந்த போது சந்தேகத்திற்குரிய நபர் ஒருவர் உள்ளே நுழைய முயன்றுள்ளார். காவலர்கள் அவரை தடுத்து நிறுத்தியுள்ளனர். இதனை அடுத்து தனது உடலில் கட்டியிருந்த குண்டை அவர் அங்கே வெடிக்க வைத்தார்.

இதில் இரு காவலாளிகளும் தொழுகையில் ஈடுபட்டிருந்த இருவரும் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்; 20 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

காவலாளிகள் தற்கொலைத் தாக்குதலாளியைத் தடுத்து நிறுத்தியிருக்காவிட்டால் உயிர்ச்சேதம் அதிகம் ஏற்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-8)



குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் உயிரிழந்து கிடக்கும் ஒருவரின் சடலம்.

# ஈராக்கில் மூன்று குண்டுத்தாக்குதல்கள்: 27 பேர் உயிரிழப்பு; 16 பேர் காயம்!

பக்தாத்,ஒக்.12

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த மூன்று குண்டு வெடிப்புக்களில் 27 பேர் உயிரிழந்தனர்; 16 பேர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கிய எண்ணெய் அமைச்சகத்தின் அருகே தற்கொலைக் கார்க்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் 17 பேர் கொலலப்பட்டனர். அவர்களில் ஏழுபேர் பெண்களாவர்.

கிழக்கு பக்தாத்தில் அமைந்துள்ள பொலீஸ் பயிற்சி நிலையத்தின் அருகே மற்றொரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிதைந்த உடல்களும், கண்ணாடித் துண்டுகளும், காலணிகளும், காகிதங்களும், கைப்பைகளும் தெருவெங்கும் சிதறிக்கிடந்தன. பொலீஸ் பணிக்கு பயிற்சிகளைப் பெற்று வரும் பெண் அதிகாரி உட்பட நான்கு பேர் இத்தாக்குதலில் சிக்கிப் பலியாகினர்.

பண்பாட்டு அலுவல்கள் அமைச்சக அலுவலகம் அமைந்துள்ள சிறு சந்தைப்பகுதியில் மற்றொரு தாக்குதல் நடந்தது. இதில் ஒருவர் காயமடைந்தார். வீதியில் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. அந்த வழியில் சென்று கொண்டிருந்த அமெரிக்க வாகனங்களைக் குறிவைத்து இத்தாக்குதல் நடத்தியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-8)

# செங்குந்தா கடைத்தொகுதி 15 ஆம் திகதியன்று திறப்பு

யாழ். மாநகர சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட "நல்லூர் செங்குந்தா பொதுச் சந்தைக் கடைத்தொகுதித் திறப்புவிழா எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி கே.குணராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் சந்தைக் கட்டடத் தொகுதியைத் திறந்துவைப்பார். இந்நிகழ்வில் யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர்கள், முன்னாள் ஆணையாளர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (8-5-7)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிப்பிள்ளை தங்கம்மா



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை தங்கம்மா அவர்கள் (09.10.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (வெள்ளையப்பா) அவர்களின் அன்பு மனைவியும் முருகேசு - பார்வதி (அமரர்கள்) ஆகியோரின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை - தெய்வானை (அமரர்கள்) ஆகியோரின் அருமை மருமகளும் பாக்கியம் சண்முகதாஸ் (ஜேர்மனி), கிருஷ்ணபகவான் (தொழில்நுட்ப போதனாசிரியர், தொழில் பயிலுநர் பயிற்சி நிறுவனம், கட்டுப்பெத்த, மொறட்டுவ), சாரதா (அமரர்), தவராசா (அமரர்), கணேசையா (ராசு - கனடா), ஸ்ரீதரன் (அமரர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மநாதன் (காமாட்சி அம்பாள் இரும்புத் தொழிலகம்), நாகேஸ்வரி (ஜேர்மனி), ஆனந்தேஸ்வரி (இளைப்பாறிய லிகிதர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), துரைராஜா (ஆறுமுகம் சிற்பாலயம்), றஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பவானி மகேந்திரன் (சுவிஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்) அமரர், பிருந்தா (ஆங்கில ஆசிரியை), ஜனகன், ராகவன் (ஜேர்மனி), தாரணி (கொழும்பு), ராதா, ஜெகதீஸ்வரன், விஜிதா, ரவிசங்கர் (சுவிஸ்), ரதீபன் (கணனிக் கலலூரி, கொழும்பு), நிதர்சன், நிவேதா, கீந்தன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ம.கலிபன், ம.மதுசன், ர.ஆதிநாத் ஆகியோரின் பூட்டியும் அமரர் விஸ்வலிங்கம், அமரர் செல்லம்மா, அமரர் கனகம்மா, நல்லையா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-10-2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு (பழைய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
(சி-38150) (26-11-46)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பத்மாவதி சுப்பிரமணியம்



சுழிபுரம் கிழக்கு, வீரபத்திரர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சுப்பிரமணியம் (10.10.2004) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (முன்னாள் பெருந்தோட்ட பணிப்பாளர், பெருந்தோட்ட ஆக்கம், இரத்தினபுரி) அன்பு மனைவியும் அமரர்களான நாகலிங்கம் - பொன்னம்மாவின் சிரேஷ்ட புத்திரியும் மனோன்மணியின் (கொழும்பு) அன்புப் பெறாமகளும் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மாவின் மருமகளும் பத்மராணி, அருள்மொழித்தேவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவநேசன் (கனிஷ்ட பிரிவு அதிபர், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), அனுசியா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் கமலாவதி (கனடா), பத்மநாதன் (முன்னாள் உப அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), இந்திராவதி (கொழும்பு), கமலநாதன் (பிரான்ஸ்), சோதிநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரியும் இரத்தினம், பாலசிங்கம் (கொழும்பு), புவனேஸ்வரி, மனோகரி ஆகியோரின் மைத்துனியும் சிவதர்ஷினி, சிவதாரணி, பிரணவன் அனுசன், அர்ச்சனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் திருவடிநிலை இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் கோவிலடி,*
*திசமளை, சுழிபுரம் கிழக்கு.*
(37473)(39-11-44-26)

தகவல்:
மகள், மகன்.
திருமதி சி.பத்மராணி,
சு.அருள்மொழித்தேவன்.

# கைதடி வைத்தியசாலையில் பொருள்கள் திருட்டு

தென்மராட்சி,ஒக்.12

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த 20ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அண்மையில் திருட்டுப் போயுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலீஸார் ஆறு பேரைக் கைது செய்துள்ளனர்.

இந்த ஆறு பேரும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (8-117)

# போர்நிறுத்த உடன்படிக்கையை இராணுவம் தொடர்ந்து கடைப்பிடிக்கும்

55ஆவது ஆண்டு விழாவில் சாந்த கோட்டேகொட

கொழும்பு,ஒக்.12

ஆத்திரமூட்டும் விடயங்கள் இடம்பெற்றாலும் விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை இராணுவத்தினர் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றனர் என்று தெரிவித்தார் இராணுவத் தளபதி லெப் ரினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட.

இராணுவத்தை நிறுவிய 55ஆவது ஆண்டு விழா வைபவம், நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் இடம் பெற்றது.

அதில் பங்குகொண்டு பேசுகையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த வைபவத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில், உலகில் எந்த இராணுவமும் பெற்றுக கொள்ளாத அனுபவத்தை எமது இராணுவம் பெற்றுள்ளது. இருபது வருடங்களாக பயங்கரவாதத்துடன் போராடிய அனுபவம் அது - என்றும் தெரிவித்தார்.

நோர்வே அனுசரணையிலான விடுதலைப் புலிகளுடனான யுத்தநிறுத்த உடன்படிக்கையை இராணுவம் பேணிவருவதாக அவர் இராணுவத்தைப் பாராட்டினார்.

தமிழர் பிரச்சினை முற்றியதற்குக் காரணம், தமிழர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் நிலவிய தொடர்பால் இடைவெளி, இராணுவத்தினர் தமிழ் பரீட்சியம் அற்றிருந்தனர். இதனை நிவர்த்திக்க நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கு தமிழ்மொழி வகுப்புகள்,, பல்வேறு மட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன- என்று தெரிவித்தார் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சாந்த கோட்டே கொட. (க-8)


உடன் விற்பனைக்கு

D.S.R. Chinese Motor Bicycle
110CC - One Owner
Ladies Model விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: செரண்டிப் விமானசேவை
86, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம்.
(37476)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆசிரிய சேவையில் இவ்வருடம்
வெள்ளி விழாக்காணும்
யா/இளவாலை கன்னியர்மடம்
மகாவித்தியாலய ஆசிரியர்களான
**செல்வி அ.அருளானந்தம்**
**திருமதி யோ. நவரட்ணராஜா**
ஆகியோரை மேலும் பல்லாண்டு சிறப்புடன் சேவையாற்ற மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(37462)(26-11-46) - ஆசிரியர் கழகம்.

## பாராட்டி அகமகிழ்கின்றோம்



மகேந்திரன் - செல்வராணி தம்பதியரின்
புதல்வியும், யா/கரணவாய் தாமோதர
வித்தியாசாலை மாணவியுமாகிய
செல்வி **மார்தங்கி**
அவர்கள் 2004 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைநதமையைப் பாராட்டி மகிழ்வதுடன், மேலும் கல்வியிலும், ஏனைய துறைகளலும் இனிது வளர வாழ்த்துகிறோம்.

*கவிஞர்*
*செல்லையா வீதி.*
*அல்வாய்.*
(37475)(34-11-46-26)

வாழ்த்துவோர்:
மா.அனந்தராசன்,
அ.கமலாவதி,
அ.வைகுந்தன்,
அ.வசந்தன்.

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

ஸாகித்ய ஸாகரம், முத்தமிழ் கலாநிதி
**பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் நினைவு**

இடம்: யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி புதிய மண்டபம
காலம்: இன்று (12.10.2004) செவ்வாய்க்கிழமை
மாலை 4.00 மணிக்கு
தலைவர்: S.ரதீஸ்வரன் நுண்கலைமன்றம்
அறிமுகவுரை: கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
அஞ்சலியுரை: சிவநெறித்தவமகன ஆறு.திருமுருகன்
நினைவுரை: **அழகியற் கல்வியும் ஆளுமையும் - சமூகநிலை நின்ற ஒரு நோக்கு**
வாழ்நாள் பேராசிரியர் சாகித்திய ரத்ன ",, கார்த்திகேசு சிவத்தம்பி
நாட்டியரங்கம்: "ஸாகித்தியமணி சந்தித்த ஒலி"
(யா/தே.க.க நுண்கலை மாணவர்கள்)
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
நுண்கலைமன்றம், யா.தே.க.கல்லூரி.
(37451)(42-11-46-26)

லிட்டில் இந்தியன் பேஷன். 77 பெரியகடை வீதி. யாழ்ப்பாணம்.

## இரண்டாவது ஆண்டில் ஆறாத் துயரில் அப்பாவினது நினைவு

தோற்றம் 14 - 05 - 1938



மறைவு 05 - 10 - 2002

## அமரர் நாகலிங்கம் பூபாலராசா

*ஆண்டுகள் இரண்டு ஆனாலும் தந்தையே!*
*உங்கள் முகம் முழுநிலவு போல் ஜொலிக்கிறதே!*
*நாளாக நாளாக நிலவுகூடத் தேய்ந்து போகும்*
*ஆனால் – உங்கள் நினைவு மட்டும் என்றும் வளர்பிறையே!*
*கல்லறையில் கண்களை மூடி நீங்கள் தூங்குவது அங்கே*
*கதை கதையாய்ச் சொல்ல கண்ணீர்த் துளிகள் நித்தம் இங்கே?*
*உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.*

சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயிலில் அன்னாரின் நினைவாக இன்று 12-10-2004 அன்னதானம் வழங்கப்படும்.

சீரணி, சண்டிலிப்பாய்.
(37472) (26-11-46)

தகவல்:
மகள் விஜி
(பிரான்ஸ்).

அன்பு மனைவி,
பாசப்பிள்ளைகள்.


கொழும்பிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் மிகச் சிறந்த ஆசிரியர்கள்

Certificate in English For Beginners
Diploma in English
IELTS
Lecturers are From Colombo

SINHALA For Govt Officers
FRENCH For Children
Separate Classes for Adults

English For Juniors
- Pre Foundation
- Foundation
- Lower Intermediate
- Intermediate
- Upper Intermediate

Division Managed and Taught by Teachers from Colombo & India

British BUSINESS SCHOOL
Where Students Come First
BRITISH BUSINESS SCHOOL
யாழ்ப்பாணம் 140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
வடமராட்சி பருத்தித்துறை வீதி, கிராமக்கோட்டடி, புலோலி.
யாழ்ப்பாணம் 174, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
TELEPHONE : 021-2225796

யாழ்ப்பாணம்



உதயன்

## 'கூத்தணியின்' கூத்துகள்!

"கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு" என்பார்கள். அதேபோன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டின் புளுகும் இப்போது ஆறு மாதத்தில் அம்பலமாகத் தொடங்கி விட்டது.

பொய்ப்பிரசாரம் செய்து - பொய் வாக்குறுதிகளை முழங்கி - இட்டுக் கட்டுக் கூறி - ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் புளுகுகள் - வண்டவாளம் - இப்போது தண்டவாளம் ஏறத்தொடங்கிவிட்டன.

கொள்கை இணக்கம் இல்லாத - கோட்பாட்டு முரண்பாடு மிக்க - இரண்டு கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக அணி சேர்ந்ததன் மகாத்மியம் இப்போது புரிகிறது.

இந்த அரசின் இயலாமை ஒருபுறம் வெளிப்படுகின்றது என்றால் மறுபுறம் ஆளும் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் இழுபறி, மேடையேறுகின்றது.

"உங்கள் அரசின் கூட்டுக்குள்தான் 'குடுமிப்பிடி' முரண்பாடு. முதலில் அதைத் தீருங்கள். விரைந்து அமைதி முயற்சிகளை ஆரம்பியுங்கள். அதைத்தான் நாடு இச்சமயத்தில் உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது." - என்று ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில் அப்பட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அவர் கூறுவதுபோல, அமைதித் தீர்வுக்கான முயற்சிகளில் மட்டுமல்ல நாளாந்த அரசியல் நடவடிக்கைகளைக் கொண்டிழுப்பதிலேயே இந்த அரசுக் கூட்டுக்குள் இழுபறிதான். அதுவே இப்போது ஊடகங்களில் பிரசித்தமாகிக் கொண்டிருக்கின்றது.

ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டம் என்ற பெயரில் ஜே.வி.பி. அமைச்சர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கையில் பெரும் ஊழல் என்று ஆட்சித் தலைவி ஜனாதிபதி குமாரதுங்க ஆணித்தரமாகக் கூறியிருக்கின்றார். இதனை விளக்கும் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றையும் அமைச்சரவைக்கு - கறுப்பு, வெள்ளையில் - எழுத்தில் - அவர் சமர்ப்பித்திருக்கின்றார். கொழும்பு ஊடகங்கள் அவற்றை ஆதாரத்தோடு அம்பலப்படுத்தியிருக்கின்றன.

அதற்குப் பகிரங்கப் பதிலடி தந்திருக்கின்றது ஜே.வி.பி.

மாத்தளையில் ஒரு தொகுதி விவசாயிகள் முன்பாகப் பேசிய - ஜே.வி.பியைச் சேர்ந்த - அமைச்சர் அனுரகுமார திஸநாயக்கா தமது அரசின் தலைவிக்கு எதிராகவே முழங்கியிருக்கின்றார் - ஆனால், அரசுத் தலைவியின் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல்!

"லொக்கு நோனா (பெரிய பொம்பிளை) தனது கட்சிக்காரர்களின் ஊழலை மறைப்பதற்காக எமது ஆயிரம் குளம் புனரமைப்புத் திட்டம் தொடர்பாகப் பொய்யான குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுகின்றார்" - என்று குறிப்பிட்ட ஜே.வி.பி. அமைச்சர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் உள்ள பெருந்தெருக்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் கடுகதிப்பாதை அபிவிருத்தித் திட்டத்தில்தான் பெரும் ஊழல் என்றும் குற்றம் சுமத்தினார்.

"எங்கள் கட்சியுடன் (ஜே.வி.பியுடன்) மோதத் தயாராகும் எந்தக் கட்சியுடனும் நேருக்குநேர் மோதுவதற்கு நாங்கள் தயார்" என்று அறிவித்த அனுரகுமார திஸநாயக்கா "பணம் சம்பாதிப்பதுதான் பல அரசியல்வாதிகளின் நோக்கம். ஆனால், நேர்மையாக மக்கள் பணி செய்யலாம் என்பதற்காகவே ஜே.வி.பி. இந்தக் கூட்டை அமைத்தது. எனினும், அதற்காக இன்று நாங்கள் பெரும் அரசியல் போராட்டம் நடத்தவேண்டியிருக்கின்றது. அடுத்தவரின் பாவங்களை நாம் சுமக்கமுடியாது" - என்றும் அவர் முழங்கியிருக்கின்றார்.

நாட்டில் அரிசி விலை ஏற்றத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களின் ஆள்கள் செய்யும் ஊழல், பதுக்கல், கொள்ளைலாப நடவடிக்கைகள் போன்றவைதான் காரணம் எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

ஜனாதிபதிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான குடுமிப்பிடி - பிணக்கு - அம்பலமாகத் தொடங்கியதை அடுத்து, அதனால் தமது கூட்டமைப்பு குலைந்து, தமது அரசு கவிழ்ந்துவிடுமோ என்று அஞ்சும் ஜனாதிபதி, வழமைபோல, இவ்விடயங்களை வெளியே கொண்டு வந்த ஊடகங்கள் மீது பொரிந்து தள்ளியிருக்கின்றார்.

ஆளும் 'கூத்தணிக்குள்' நடைபெறும் கூத்துக்கள் ஒருபுறமிருக்க தமது அரசின் இயலாமையை அரசுத் தலைவியான ஜனாதிபதியே ஒப்புக்கொண்டிருக்கின்றார் என்ற தகவல் மறுபுறம் வெளியாகியிருக்கின்றது.

வியாங்கொடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி குமாரதுங்க, விலைவாசி ஏற்றத்தால் உருவாகும் பாரத்தை மக்கள்தான் சுமக்கவேண்டும். அரசினால் இதற்கு நிவாரணம் தரவே இயலாது என்று கைவிரித்துவிட்டார்.

"நாங்கள் இலவசமாக மக்களுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருக்கமுடியாது. தொடர்ந்து நாங்கள் நிவாரணம் வழங்கிக் கொண்டிருப்பதாயின் அரசின் மற்ற அபிவிருத்திப் பணிகளை நிறுத்தவேண்டியதுதான். சம்பள உயர்வையோ, புதிய வேலைவாய்ப்புக்களையோ வழங்கமுடியாது.

"வாழ்க்கைச்செலவு உயர்வை மக்கள் தாமே பொறுத்துக் கொள்வார்கள் - ஏற்றுக்கொள்வார்கள் - என நம்புகின்றேன். ஏனென்றால் அரசோ அவர்களுக்கு கல்வி, மருத்துவம், பாடசாலைச் சீருடைகள் மற்றும் சமுர்த்தி வசதிகள் போன்றவற்றைச் செய்து கொடுக்கின்றதே.

"பஸ் கட்டண உயர்வு குறித்துப் பெரிய பிகு பண்ணப்படுகின்றது. அப்படிச் செய்வதில் அர்த்தமில்லை. ஏனென்றால் அது உலகளாவிய ரீதியில் இடம்பெறும் பொது விடயம்தான்" - என்றெல்லாம் நாட்டு மக்களுக்கு விளக்கம் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி.

இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. என்ன சாதித்துக் கிழித்து விட்டார்கள்?

அமைதி முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் நகர்ந்தனவா? இல்லவே இல்லை. அந்தர நிலைக்கு அது போய்க் கொண்டிருக்கின்றது. மீண்டும் யுத்தம் தவிர்க்கமுடியாதது என்ற நிலைக்கு நாடு நகருகின்றது.

மக்களின் வாழ்க்கையில் ஏதும் முன்னேற்றம் உருவானதா? விலைவாசி குறைந்ததா? சுபீட்சம் ஏற்பட்டதா? வசதி, வாய்ப்புக்கள் கிட்டினவா? எதுவுமே இல்லை. நன்மைதரும் விடயங்கள் தேய்ந்து செல்வது - சென்றது - தான் மிச்சம்.

பிழையான கூட்டுக்கு வாக்களித்ததன் பயனை இலங்கைத்தீவு அனுபவிக்கின்றது அவ்வளவே. வாக்களிக்கும்போது அதுபற்றிச் சிந்திக்காத சிங்களப் பொதுமக்கள் இப்போது தலையில் கை வைத்து அழுவதால் என்ன பயன்? விதைத்ததுதானே விளையும்?...!

# அரசுக்கும் புலிகளுக்குமிடையில் விரைவில் பேச்சு ஆரம்பமாகும்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சூசக அறிவிப்பு

கொழும்பு,ஒக்.12

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையில் விரைவில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம் என்று இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு நிருபர் ஒருவருக்கு அளித்துள்ள செவ்வியில் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

அமைதி முயற்சியில் 2002ஆம் ஆண்டில் இருந்து நோர்வே அனுசரணை புரிந்து வருகின்றது. இப்பொழுது அவர்கள் விடுதலைப் புலிகள், அரசு ஆகிய இருதரப்பினரோடும் கலந்துரையாடி வருகின்றார்கள்.

இப்பொழுது பேச்சுக்கான நிகழ்ச்சிநிரல் பற்றி ஆராயப்பட்டு வருகின்றது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல், நாடாளுமன்ற அமைப்பு முறையைக் கொண்டுள்ளது. ஒருவகையில் இது பாகிஸ்தான் அமைப்புப்போல இருக்கின்றது. இதுபற்றி என்ன கூறுகிறீர்கள் என்று செய்தியாளர் கேட்டதற்கு பிரதமர் கூறியதாவது:-

எம்முடையது ஜனாதிபதி முறையைக் கொண்ட அமைப்பு. ஆனால் பெருமளவில் பாகிஸ்தான் முறைக்கு மாறானது. எமது அமைப்பில் அதிகாரங்கள் ஜனாதிபதியிடமும் அமைச்சரவையிடமும் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். நாடாளுமன்றம் ஒற்றை அமைப்புக் கொண்டது. அதன் உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதித்துவமுறையில் தெரிவு செய்யப்படுகிறார்கள். அதேசமயம். நிறைவேற்று அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் உள்ளன. இருந்தாலும் நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் இல்லாமல் அவரால் எந்த ஒரு சட்டத்தையோ விதிகளையோ அனுமதிக்கமுடியாது. எமது நாட்டில் நாடாளுமன்றம் மிகவும் பலமானதாக உள்ளது. சட்டங்களை ஒழுங்குபடுத்தி நிறைவேற்ற நாடாளுமன்றம் வடிகால் போன்று செயற்படுகின்றது. அந்த வகையில் நாடாளுமன்றமே உயர் அதிகார பீடமாகும்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை மாற்றுவதற்கான முயற்சிகள் பற்றி பிரதமர் கூறியதாவது:-

உண்மையில் இந்த முறையை மாற்றுவதற்கு நாம் முயன்று வருகின்றோம். ஜனாதிபதியின் அதிகாரங்களை மாற்றும் அளவிற்கு நாடாளுமன்றத்தில் எமக்கு போதுமான அளவு பலம் இல்லை.

செய்தியாளர்:- அரசிடமிருந்து ஆக்கபூர்வமான யோசனைகள் கிடைக்கவில்லையென்று போராளிகள் தரப்பில் கூறப்படுகின்றது. அது பற்றி உங்கள் கருத்தென்ன?

பிரதமர்:- இது சரியல்ல. எம்மிடமிருந்து ஆலோசனையொன்று அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாக அவர்களும் தகவல் அனுப்பியுள்ளார்கள்.

பேச்சுக்கள் ஒருவேளை ஒஸ்லோவில் இடம்பெறலாம். 2002ஆம் ஆண்டு அவர்களுடன் மிகப்பயனுள்ள வகையில் நாம் பேச்சுக்கள் நடத்தியுள்ளோம்.

செய்தியாளர்:- ஜனாதிபதி பதவிக்கு நீங்கள் போட்டியிட விரும்புவதாகக் கூறப்படுகின்றது. 2005ஆம் ஆண்டு அவரது பதவிக்காலம் முடிவுற்றதும் நீங்கள் அதற்குப் போட்டியிடலாம் என்றும், சில பங்காளிக் கட்சிகள் உங்களை ஆதரிப்பதாகவும் கூறப்படுகின்றதே?

பிரதமர்:- அப்படியான பிரச்சினை ஏதுமில்லை. ஏனென்றால் அவர் முதலிடத்திலும் நான் இரண்டாம் இடத்திலும் இருக்கின்றேன்.

செய்தியாளர்:- அரசியல் சட்டத்தின்படி 2005 ஆம் ஆண்டு அவரது பதவிக் காலம் முடிகின்றது. அவர் தொடர்ந்தும் பதவியிலிருக்கும் விதத்தில் அரசியல் சட்டத்தை மாற்றுவீர்களா?

பிரதமர்:- ஆம். அதுவே நாடாளுமன்றத்தின் விருப்பமாக இருந்தால்.

செய்தியாளர்:- அப்படிச் செய்யும் படி நீங்கள் கட்டாயப்படுத்தப்படுகிறீர்கள் என்று கருதப்படுமல்லவா?

பிரதமர்:- நாம் ஒரு ஜனநாயக அமைப்பைக் கொண்டிருக்கிறோம். அரசியல் சட்டத்தை திருத்துவதற்கு நாடாளுமன்றம் சம்மதிக்கவேண்டும். அவ்வாறானால் அதைச் செய்வோம். கட்சிகள் விரும்பினால் அவர்கள் மாற்றங்களை ஆதரித்தால் அவர் மேலும் நான்கு ஆண்டுகளுக்கு பதவியில் இருப்பார்.

(ப)

# பலாலி ஓடுதள மறுசீரமைப்பு அரச செலவிலேயே நடக்கும்

## அமெ., இந்திய உதவிகள் நிராகரிப்பு

கொழும்பு,ஒக்.12

பலாலியில் உள்ள விமான நிலைய ஓடுபாதையைத் தனது சொந்தச் செலவிலேயே புனரமைக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஓடுபாதையை புனரமைக்கும் திட்டத்துக்கு ஒரு புறத்தில் இந்தியாவும் மறுபுறத்தில் அமெரிக்காவும் உதவுவதற்கு முன்வந்தன.

ஆனால், இதுவிடயத்தில் இரண்டு பக்க உதவியையும் பெறுவதில்லை என்றும் -

அரசு தனக்குள்ள மூலவளத்தை திரட்டியே இந்த நடவடிக்கையை முன்னெடுப்பது என்றும் -

அமைச்சரவை முடிவு செய்திருக்கின்றது.

ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சரும் முப்படைகளின் சிரேஷ்ட தளபதியுமான சந்திரிகா குமாரதுங்க சமர்ப்பித்த சிபார்சின் பேரிலேயே அமைச்சரவை இவ்வாறு தீர்மானித்தது.

இந்தத் திட்டத்துக்கு உதவ இந்தியாவும், அமெரிக்காவும் தனித்தனியாக முன்வந்தன என்றாலும் ஓடுபாதையை இலங்கையும் மற்றும் அதை மறுசீரமைக்க உதவும் நாடும் மட்டுமே பயன்படுத்தமுடியும் என்ற நிபந்தனையுடனேயே அவை நிதி வழங்க இணங்கின எனவும் கூறப்படுகின்றது.

இந்த யோசனையை நிராகரித்த இலங்கை அரசு, தானே 36 கோடி ரூபா செலவில் ஓடுபாதையைச் செப்பனிட முடிவு செய்திருக்கின்றது. (ஐ-க)

# இலங்கை இராணுவத்தின் பாவனைக்கு 98 யுத்த டாங்கிகள் தேவைப்படுகின்றன

## கொள்வனவு செய்யக் கோருகின்றார் இராணுவத் தளபதி

கொழும்பு,ஒக்.12

அடுத்த ஐந்து ஆண்டுகளில் இராணுவத்தின் பாவனைக்கென 2ஆயிரம் கோடி ரூபா செலவில் மொத்தம் 98டாங்கிகள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கோட்டேகொடவினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கூடிய தேசியப் பாதுகாப்புக் கவுன்ஸிலின் கூட்டத்திலேயே இராணுவத் தளபதி மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

நாடு பொருளாதார நெருக்கடியில் தள்ளாடும் நிலையில் இவ்வாறான கோரிக்கை நியாயமானதா என கவுன்ஸிலின் உயர் அதிகாரிகள் பலரும் பல்வேறு விதத்திலும் கேள்விகளை எழுப்பினர்.

நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்ட ஜனாதிபதி, இராணுவத் தளபதியின் கோரிக்கையை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரினார். ஆயினும் படையினரின் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குரிய ஆயுதக் கொள்வனவுக்கு நிதி ஒதுக்க ஜனாதிபதி உறுதி தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், முப்படைத் தளபதிகள் உட்படப் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (8-ரி)

# விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியாது என்கிறார் ஜனாதிபதி

உலக சந்தையில் விலை அதிகரிக்கிறது. அதனால் நாட்டில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ஒன்றும் செய்ய முடியவில்லை என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கம்பஹா மாவட்டத்தில் வியாங்கொடவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

எல்லாவற்றையும் இலவசமாகவும் மானிய அடிப்படையிலும், சலுகை ரீதியிலும் வழங்கமுடியாது. இலவசக் கல்வி, இலவச மருத்துவம், இலவசக் குடிதண்ணீர், இலவச மின்சாரம் இப்படி எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுக்கமுடியாது. இது ஆரோக்கியமான சமூகத்திற்கு நல்ல அறிகுறியல்ல என்றும் தெரிவித்தார் ஜனாதிபதி.

தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது குறித்தும் அவர் வெளிப்படுத்தினார்.(க-8)

### நாளை

புரட்டாதி 27
புதன்கிழமை
(13.10.2004)
திதி: அமாவாசை
நட்சத்திரம் : அத்தம்
பின்னிரவு 02.47
அமாவாசை விரதம்
மஹாளய பக்ஷ முடிவு
சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32
(பழைய நேரப்படி)

# ஊடுருவி வேவுபார்க்கும் அணி இராணுவத் தளபதியால் கலைப்பு

கொழும்பு,ஒக்.12

இராணுவப் புலனாய்வுப் பணியகத்தினால் கடந்த 1990ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட நீண்டதூரம் ஊடுருவி வேவு பார்க்கும் ரோந்து அணி இராணுவத் தளபதி ஜெனரல் சாந்த கோட்டேகொடவினால் கலைக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டு, மூத்த உறுப்பினர் பலரைக் கொலைசெய்ததைத் கண்டித்து, இப்பிரிவைக் கலைத்து விடுமாறு விடுதலைப் புலிகள் அழுத்தம் கொடுத்து வந்திருந்தனர்.

இப்பிரிவு இப்போது கலைக்கப்பட்டுள்ளதால், பலர் இதிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்ந்தும் இப்பிரிவில் பணியாற்ற விருப்பம் கொண்டிருப்பினும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக, பெரும்பாலானவர்கள் இப்பிரிவை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(8-204)

### உதயவாக்கு

மனிதனின் பண்பைச் சோதிக்க விரும்பினால் அவனிடம் சிறிது அதிகாரத்தைக் கொடுத்துப் பார்க்கவேண்டும்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

சிவராசா விக்கினேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (No:500710462V) கடந்த வெள்ளிக்கிழமை நல்லூரில் தவறிவிட்டது. கணடெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். 222 7843. முகவரி: நந்தாவில் அம்மன் றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(37442)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சோ்ந்த 1961 இல் பிறந்த, விசாக நட்சத்திரம், 4 ஆம் பாதம், தற்போது அரசாங்க வேலையில் பணி புரியும் மணமகனுக்கு படித்த,அழகிய மணமகள் தேவை. தொடர்பு:விளம்பர இல: 2404, மே/பா, உதயன்.

(37401)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 13.10.2004 மாலை விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச்சந்தி T.P:3529, ஸ்ரீராம் கால்நடைத்தீவன விற்பனை நிலையம் (பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக), றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், P.ரவி, தபாறகந்தோர் வீதி, சாவகச்சேரி. (37466)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலிகாமம் தெற்கு,ஒக்.12

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெறும். இககூட்டத்துக்கு இப்பிரதேசத்தைச் சேர்ந்த சகல திணைக்களத் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தைத் தொடர்ந்து விவசாயிகள் குழுக் கூட்டம் நடைபெறும்.

(4-152)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்

Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails

ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.

**SAAMSTECH**

841, Hospital Road, Jaffna.

Phone: 0773 068968.

(சி-37842)

## தவறிவிட்டது

பரமலிங்கம் சிவலிங்கம் என்பவருடைய, தோளில் தொங்கவிடுகின்ற கறுப்பு நிறப்பை ஒன்று பாஸ்போட், அடையாள அட்டை, லைசென்ஸ்கள், விமான டிக்கெற், கிறடிற் காட், கைத்தொலைபேசி என்பனவற்றுடன் வேலணை - யாழ்ப்பாண வீதியில் அல்லைப்பிட்டிக்கும் பண்ணைப்பாலத்துக்கும் இடையில் நேற்று (11.10.2004) திங்கட்கிழமை காலையில் தவறிவிட்டது. கணடெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

**முத்துமாரி நகையகம்,**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(37474)(34) க.உஜிதன் T.P.:0777 161955.

## உதவியாளர் தேவை

எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கு (ஆண்/பெண்) உதவியாளர்கள் தேவை.

**மூர்த்தி கலர் லாப்,**

மானிப்பாய்.

(C/38145) ☎ 021 222 2884

## பருத்தித்துறை அஞ்சலகத்திற்கு கௌரவமும் பாராட்டும் வாழ்த்தும்





திரு.கா. மு.சிவகுருநாதன் திரு.தா. சி.சிவகுமார்

சர்வதேச அஞ்சல்தினம் தொடர்பாக அஞ்சல் திணைக்களத்தினால் பருத்தித்துறை அஞ்சலகத்தினைச் சேர்ந்த திரு.கா.மு.சிவகுருநாதன் - தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தர் - அகில இலங்கை ரீதியில் முதலாவதாகவும், யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் முதலாவதாகவும் தெரிவுசெய்யப்படடுள்ளார். அத்துடன் இதே அஞ்சலகத்தினைச் சேர்ந்த திரு.தா.சி.சிவகுமார் அலுவலக உதவியாளர், யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் இரண்டாவதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அஞ்சலதிபரின் சிபார்சில் சிறந்த சேவை மனப்பான்மை, ஒழுக்கம், கடமையுணர்வு, அர்ப்பணிப்புக் காரணமாகத் தெரிவு செய்யப்பட்டு எமக்குப் பெருமை தேடித்தந்த இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் அகமிக மகிழ்கின்றோம். இவர்களுக்குக் கிடைத்த வெற்றி ஏனையோர்களுக்கும் படிக்கற்களாக அமையட்டும்.

தபாலகம்,
பருத்தித்துறை.

வாழ்த்துவோர்:
அஞ்சலதிபர், உதவி அஞ்சலதிபர்கள்,
உப அஞ்சலதிபர்கள்,
மற்றும் எல்லாத் தரங்களைச் சேர்ந்த
உத்தியோகத்தர்கள்.

(37359)(39-34-11-18)

## முதலாவது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1st HAPPY BIRTHDAY



செல்வன் **லோஷன்**

12.10.2004

நீரு.திருமதி செல்வரத்தினம் - சசிகலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் லோஷன் தனது முதலாவது பிறந்தநாளினை சுவிற்ஸர்லாந்தில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, மாமா, சித்தா, பெரியம்மாமார், பெரியப்பாமார், அக்காமார், அண்ணன்மார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்லாண்டு காலம் சீருஞ்சிறப்பும் பெற்று வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்துவோர்: P.பிரதாப் (மாமா).

ஆனைப்பந்தி. (37460)(34-11-18)

# எங்கள் நினைவலைகள்

## அமரர் அருணாசலம் யோகானந்தா (B.Sc.(Cey.).Dip.in.Edu.)

உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம்



தோற்றம் 16.10.1952 மறைவு 04.09.2004

### மாணவர்களுக்காக உழைத்தவர்

அமரர் யோகானந்தா யாழ். பிரதேசத்தில் பௌதிகவியலில் புகழ்பூத்த ஆசிரியராக விளங்கி, பொறியியலாளர்களையும், மருத்துவர்களையும் உருவாக்கினார்.
1999 ஆம் ஆண்டிலிருந்து தென்மராட்சிக் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவிபெற்று மாணவர்களின் உயர்வுக்காகத் தனது உழைப்பை ஈந்தவர். அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

வ.செல்வராசா
கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.

### கலங்கரை விளக்கம்

அமரர் யோகானந்தா தென்மராட்சியில் கணிதபாட வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர். பௌதிகவியல் பாடத்தில் நிறைந்த புலமையுள்ள இவர், மாணவர்கள் மத்தியில் கலங்கரை விளக்காக விளங்கினார்.

செ.உதயகுமார்
பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி,
தென்மராட்சிக் கல்வி வலயம்.

### பலதரப்பட்ட பட்டதாரிகளை உருவாக்கியவர்

கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளராகச் செயற்பட்டபோது, கணிதபாட ஆசிரியர்களின் தேவைகளை இனங்கண்டு, செயற்பட்டார். யாழ். மாவட்ட பௌதிகவியல் மாணவர்கள் அனைவருக்கும் அமரர் யோகானந்தா சொந்தமானவர். அவரிடம் கற்ற பட்டதாரிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் இவரின் ஆளுமைக்குச் சான்றாதும். மேலும் பல பட்டதாரிகளை உருவாக்கவேண்டியவர் அமரராகி விட்டார். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு'

நா.சத்தியநாதன்
கோட்டக்கல்வி அலுவலர், சாவகச்சேரி.

### என் சிந்தனையில்

அன்னார் பௌதிக ஆசிரியராக இருந்தும் ஏனைய பாடங்களிலும் புலமை பெற்றிருந்தார். இடப்பெயர்வு காலங்களில் மாணவர்களுக்கு, கட்டணமின்றி கல்விபுகட்டினார். தன் மாணவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் வழிகாட்டினார். அன்னாரின் நல்லெண்ணங்கள் எம்நெஞ்சை விட்டகலாது.

வைத்தியகலாநிதி
சிதம்பரநாதன் - முகுந்தன்
யாழ். போதனா
வைத்தியசாலை

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல்
2 மணிக்கு நடைபெறும் அஞ்சலி நிகழ்வில்
அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

### சேவை விவரம்

07.07.1976 - 06.02.1979 வரை
ஆசிரியர், யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி

07.02.1979 - 15.02.1999 வரை
ஆசிரியர், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

16.02.1999 - இறுதிவரை
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
சாவகச்சேரி கல்வி வலயம்.

### கல்வி உலகின் விடிவெள்ளி

எமது பிரதேசத்தின் பௌதிகவியல் புலத்தின் விடிவெள்ளியாக விளங்கிய அமரர் யோகானந்தா பதினேழு ஆண்டுகள் எனது உற்ற நண்பனாக விளங்கியவர். அன்னாரது கல்வியுலகின் சேவையை நாம் மறக்க முடியாது. அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

தா.பாலசுந்தரம்
செயலாளர், கல்வி வலய நலன்புரிக் கழகம்.
உதவிக் கல்விப் பணிப்பாளர், வர்த்தகம்.

### வள்ளுவர் காட்டிய நெறியில் வாழ்ந்தவர்

அமரர் யோகானந்தாவின பெரும்பணியில் பல்கலைக்கழக வாசலை அடைந்த மாணவர்கள் பலர் அவரது ஆசிரியத்துவம் பல ஏழை மாணவர்களுக்கு வரப பிரசாதமாக அமைந்தது. ஒரு சமுதாயம் கல்வியாளர்களிடம் எதிர்பார்க்கும் கடமைகளை செம்மையாகச்செய்து வள்ளுவர்நெறிக்கு வரைவிலக்கணமாக வாழ்ந்தவர். அன்னாரிடம் சிறந்த பண்புநிறைந்த மனிதநேயத்தைக் காணமுடிந்தது. அமரர் இறைபதத்தில் இனிதுசேரப் பிரார்த்திப்போம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க.கந்தசாமி
பேராசிரியர், யாழ். ப்ல்கலைக்கழகம்.

### தென்மராட்சிக் கல்விச் சமூகத்திலும் பெரும் இழப்பு

யாழ். மாவட்டக் கல்விப் புலத்தில் பிரபல்யம்பெற்று, 1999 இல் கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளராக உயர்வுபெற்றார். பாடசாலைகளில் கணித, பௌதிக பாடக் கற்றல், கற்பித்தல் மேம்பாட்டிற்கு அயராது பாடுபட்டவர். அனைாரின் மறைவு கல்வி உலகிற்கு பெரும இழப்பாகும்.

இலங்கையர் கணேசன்
ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்.

### பௌதிகத்துறையின் இழப்பு

அன்னார் பௌதிகவியலில் மிகவும் புலமையுள்ள ஆசான். இவரது பிரிவு யாழ். மாவட்ட மாணவர்களுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. எனினும், பல கல்வி நிபுணர்களை உருவாக்கியுள்ளமை ஆறுதல் தருகின்றது. அவ்வெற்றிடத்தை அவரது மாணவர்கள் நிரப்புவார்கள் என நம்புகிறேன்.

க.குமாரசாமி
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ். மாவட்டம்.

### ஆசிரியர்களை வழிபடுத்திய ஆசான்

அமரர் யோகானந்தா அவர்களிடம் கணிதம், பௌதிகவியல் பாடங்களைக் கற்று, பின்பு அவரின் மேற்பார்வையின் கீழ் பௌதிகவியல் கற்பித்துள்ளேன். அன்னார், பல வறிய மாணவர்களின் உயர்கல்விக்கு உரமூட்டிய செம்மல். உதவிக் கல்விப் பணிப்பாளராக எமது வலயத்தில் பணிபுரிந்து கணித மற்றும் பௌதிகவியல் ஆசிரியர்களை நன்கு நெறிப்படுத்தி வழிகாட்டியாகச் செயற்பட்ட பெருந்தகையாவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி!

நா.சிறீகரன் (ஆசிரியர்)
செயலாளர், தென்மராட்சிக் கல்வி வலய கணித, விஞ்ஞான ஆசிரியர் சங்கம்.

நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழு:
தென்மராட்சிக் கல்வி வலய கணித, விஞ்ஞான ஆசிரியர் சங்கமும்,
தென்மராட்சி கல்வி வலய நலன்புரிக் கழகமும்.

# தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க தென்னை மரங்களுக்கு உரமிடுவோம்

எமது பிரதேசத்தில் மழைகாலம் ஆகிய இவ்வேளையில் இளம், முதிர் தென்னைகளுக்குச் சேதன அல்லது அசேதனப் பசளையிடுவது வளர்ச்சியையும், விளைவினையும் கூட்டுவதற்கு ஏதுவாக அமைகின்றது. எனவே, டிசெம்பர் மாதம் முடியும்முன்னர் தென்னைச் செய்கையாளர்கள் சேதன உரமாக மாட்டெரு, ஆட்டெரு, கோழி எரு, கிளிசரீடியா இலை அல்லது இப்பில் இப்பில் இலைகளையும், அசேதன உரமாக இளம் கன்றுக் கலவை (Young Palm Mixture - Y.P.M.), அமோனியா - 500 கிராம், T.S.P - 200 கிராம், மியூரியற்ஒவ் பொட்டாசு - 300 கிராம்), முதிர் மரக் கலவையையும் Advlt Palm Mixture - A.P.M (அமோனியா 1½ கிலோ, T.S.P - 1/4 கிலோ, மியூரியற்* ஒவ் பொட்டாசு 11/4 கிலோ) பாவிக்கலாம். சிபார்சு செய்யப்பட்ட உரக்கலவைகள் நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் ஆகிய மூன்று மகா தாவர போசனைகளைத் தன்னகத்தே

**கமமும் புலமும்**

**தயாரிப்பு : ஜெயஸ்ரீ**

கொண்டுள்ளது.

### தென்னைகளுக்கு சேதனப்பசளையிடல் முறை

பாளை வந்த தென்னை மரங்கள் ஒவ்வொன்றிற்கும் உலர் மாட்டெருவாயின் 30 கிலோவும் அத்துடன் 400 கிராம் சப்போஸ் பொசுபேற்றும் ஒரு கிலோ மியூரியற் ஒவ் பொட்டாசும் கலந்து அடிமரத்திலிருந்து 3 அடி தூரத்தில் 3 அடி அகலமாக (அடி மரத்திலிருந்து 6 அடி உட்பட்டதாக) அரை அடி ஆழத்திற்கு மட்டும் சுற்றிவரக் குழி வெட்டி அதற்குள மேற்குறிப்பிட்ட கலவையை இடுதல் வேண்டும். பின்பு அதனை மண்ணால் மூடி, பசளை வட்டத்திற்குள் தென்னோலை அல்லது பனையோலையினால் மூடி பத்திரக் கலவையாக்கி விடலாம்.

### மாடுகளைத் தென்னை மரத்தில் கட்டுதல்

தென்னையின் அடி மரத்திலிருந்து 3 அடி தூரம் தள்ளி 3 அடி அகலமாக அரை அடி ஆழத்திற்கு குழியாக வெட்டி பசளைப் பாத்தி (Manvare Basin) ஏற்படுத்தவேண்டும். பின்பு, இரு மாடுகளை 10 இரவுகளுக்குத் தொடர்ந்து ஒரு மரத்தில் கட்டவேண்டும். கட்டும்போது எல்லாக் கழிவுகளும் பசளைப் பாத்திக்குள் உறுதிப்படுத்தத்தக்க வகையில் மாடுகள் கட்டப்படல் வேண்டும். (6 அடி நீளத்திற்கு மேற்பட்ட கயிற்றினால் பிணைத்தால் எதுவித பிரயோசனமும் இல்லை).

இக்காலத்தின் பின்பு, 200 கிராம் சப்போஸ் பொசுபேற்றும், 750 கிராம் மியூரியற் ஒவ்பொட்டாசும் பாத்திக்குள் விசிறப்பட்டு மண்ணினால் மூடி விடுதல் வேண்டும். இம்முறையை வருடத்தில் மழை நேரத்தில் ஒருமுறை செய்தால் போதுமானது.

### இளம், முதிர் தென்னைகளுக்கு செயற்கை உரம் இடும் முறை


தென்னைகளில் நைதரசன் பற்றாக்குறையினால் எல்லா இலைகளும் வெளிறிய பச்சையாகத் தோற்றமளிக்கும். பின்பு, மஞ்சள் நிறமாகத் தோற்றமளித்துப் பின்பு, சிவப்புக்கலந்த நரைநிறமாக மாறுகின்றது. இறுதியாக மரத்தின் வட்டுப்படிப்படியாகச் சிறியதாகும்.

பொட்டாசியம் குறைபாட்டினால், சிற்றிலையின் நடுநரம்பில் (ஈர்க்கில்) இரு பக்கங்களிலும் புள்ளிகள் பரவலாகக் காணப்படும்.

எனவே, YPM, APM உரங்களை வருடாவருடம் தென்னைகளுக்கு இடுவதனால், மேற்குறிப்பிட்ட பற்றாக்குறை காணப்படாது, வளர்ச்சியையும் விளைவினையும் அதிகரிக்கச் செய்யலாம்.

### இளம் கன்றுகளுக்கு (இளம் மரக்கலவை) உரம் இடுதல் முறை

சாதாரணமாக 5வருடங்களுக்கு உட்பட்ட பாளை வராத தென்னைகளுக்கு YPM என்ற உரத்தினை 6 மாதங்களுக்கு ஒரு தடவை 500 கிராம் இலிருந்து, 5 வயதுடைய தென்னைகளுக்கு (பாளை வராத) 1½ கிலே வரை படிப்படியாக அதிகரித்து உரப்பிரயோகம் செயயலாம். தென்னையின் அடியிலிருந்து ½ அடி தூரம் தள்ளி, பசளை வட்டத்தின் அதாவது, மண்ணைச் சாதாரணமாக ½ அடி ஆழம்வரை கொத்திப் புரட்டி ஏற்படுத்தப்பட்ட சுற்றுவட்டத்தினைப் படிப்படியாக அதிகரித்து பாளை வரும் நேரத்தில் 6 அடியாக இருத்தல் வேண்டும். இப்படிக் கொத்திப் புரட்டிய பின்பு அதற்குள் தென்னையின் வயதிற்கேற்ப YPM உரத்



தினை இடலாம். உரமிட்ட பகுதிக்கு மேலாக காய்ந்த தென்னோலை அல்லது பனையோலையினால் மூடிவிடலாம்.

### முதிர்ந்த தென்னைகளுக்கு உரமிடுதல்முறை

மர அடியிலிருந்து 6 அடிதூரத்திற்கு மரத்தினைச் சுற்றியுள்ள முழு நிலப்பரப்பளவையும் ½ அடி ஆழத்திற்கு கொத்திப் புரட்டிய பின்பு, 6 அடியில் வரம்பு ஒன்றினைச் சுற்றிவர அமைத்து, 6 அடி சுற்றுவட்டப் பரப்பளவு முழுவதற்கும் 3 கிலோ APM உரத்தினைத் தூவி மண்ணுடன் கலந்துவிடலாம். மரத்தினைச் சுற்றி எக்காரணம்கொண்டும் குழிவெட்டி உரத்தினைப் போடக்கூடாது.

களைகள் இருப்பின், களைகளை அகற்றிய பின்பு இச்செயன்முறையை மேற்கொள்ள வேண்டும். பின்பு பசளை வட்டத்தினை தென்னோலை அல்லது பனையோலையினால் மூடி விடலாம். இப்படி வருடாவருடம் ஒரு தடவை உரப்பிரயோகம் செய்தால் தேங்காயின் விளைச்சலை அதிகரிக்கச் செய்யலாம்.

எனவே, தென்னைகளுக்கு உரமிடுதல், ஈரப்பதனைக் காக்க தென்னைகளுக்கிடையில் பொச்சுமட்டைக் குழிகளை வெட்டுதல் போன்ற ஆலோசனைகளுக்கும் தென்னைச் செய்கையாளர்கள் நல்லூர், கமநலசேவை நிலையக் கட்டடத்தில் இயங்கும் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு, YPM,APM உர வகைகளையும், நல்லின 3 வருடம், 5 வருடத்தில், காய்க்கக் கூடிய தென்னங்கன்றுகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். ❋

**ஜெ.சத்தியேந்திரன்**
*தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்*

# உலகில் உள்ள ஆறிலொரு பங்கினரின் முக்கியமான தொழில் விவசாயமே!

இந்த ஆண்டு சர்வதேச அரிசி ஆண்டாகும். உலக சனத்தொகையில் மூன்றிலொரு பேரின் முக்கிய உணவு சோறாகும். உலகில் தொழில் புரியும் ஆறிலொரு பகுதியினரின் முக்கிய தொழில் விவசாயமே. 1964 ஆம்



ஆண்டும் 2004 ஆம் ஆண்டும் சர்வதேச அரிசி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதில் இருந்து அரிசியே உலகில் முக்கிய உணவுப் பொருளாக உள்ளது என்பது கண்கூடு.

முக்கியமாக எமது நாட்டின் பிரதான தொழிலாக உள்ளதும் விவசாயமே. 15 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே இமயமலையின் வடக்குப் பிரதேசத்தில் நெற்பயிர் உற்பத்தியாக உள்ளதாக அறியப்படுகிறது. நெறபயிர் அரைப்பங்கு நீர்த்தாவரமாக அறியப்பட்டுள்ளது. தாவரவியல் விஞ்ஞானத்தில் நெற்பயிர் மிக உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது. சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்துள்ள நெல்லோடு கூடிய பாத்திரங்கள் தாய்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அது போன்றே கி.மு.சுமார் 1000 ஆம் ஆண்டளவில் இலங்கையில் நெல் விவசாயச் செய்கை இருந்துள்ளது. என்று சர்வதேச அரிசி ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

மேலும் மகாவம்சம், குவேனி - விஜயன் காலத்திலும், மகாசேனன், தாதுசேனன், மகா பராக்கிரமபாகு காலத்திலும் சோறுதான் இலங்கையின் முக்கிய உணவாக இருந்துள்ளது. மகா பராக்கிரமபாகுவின் நீர்ப்பாசனத்திட்டங்கள் இன்றும் நெற்செய்கையின் மகோன்னதத் தன்மையை உலகுக்கு உணர்த்திய வண்ணம் உள்ளன. இலங்கையில் ஒருவரது ஓராண்டு அரிசித் தேவை 100 கிலோவாக உள்ளது. 1940 களில் இருந்து இன்றுவரையில் நெல் விவசாய நிலங்களின் பிரமாணம் இருமடங்காக அதிகரித்துள்ளது. இதிலிருந்து எமது அரிசித் தேவை மென்மேலும் அதிகரித்த வண்ணமே உள்ளது என்பது தெரிகிறது.

அதற்கமைய எமது நாட்டின் நெற்செய்கையை அதிகரிக்க வேண்டுமாயின் சிறந்த தொழில் நுட்பங்களாகத் தகுந்த நெல் இனங்களைத் தெரிவுசெய்து பயிரிடுதல், தரமான விதை நெல்லை விதைத்தல், களைகளைக் கட்டுப்படுத்தல், ஒருங்கிணைந்த பூச்சி நாசினிக் கட்டுப்பாடு, மண்போஷாக்கினைக் காத்துக்கொள்வது தொடர்பான முறையான காபன பசளைகளை (இயற்கைப் பசளை) மற்றும் இரசாயன உரவகைகளை சிபார்சு செய்யப்பட்ட அளவுகளில் பிரயோகித்தல், சரியான போகத்தில் பயிர்செய்தல், முறைப்படி சிறந்த முறையில் தரையைத் தயார்செய்தல் என்பவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும். ❑

**தொகுப்பு :- சரா**




சமுர்த்தி விவசாயத் திட்டத்தின் கீழ் விவசாயி ஒருவருக்கு வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கியில் நடைபெற்ற விதை வெங்காயம் வழங்கும் நிகழ்வில், வலி.மேற்கு பிரதேச செயலர் கிர.யோகேஸ்வராஸ் விதைவெங்காயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் க.அருட்செல்வன் அராலி தெற்கு கிராம அலுவலர் சி.கனகநாயகம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: வட்டுக்கோட்டைச் செய்தியாளர்.)*

# ஜி.சீ.ஈ.(சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2004

## கணிதம் I 32 T I

உதயன் ஜி.சீ.ஈ. (சா) தரம் மாதிரி பரீட்சைகள் இல. 9

**நேரம்: ஒரு மணித்தியாலயம்** **ஆக்கம்: சி.மதியழகன்**

★ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

★ ஒவ்வொரு வினாவிற்குமுரிய விடை, தரப்பட்ட விசேட விடைத்தாளில் பொருத்தமான எண்ணைக் கொண்ட கூட்டினுள் எழுதப்படல் வேண்டும். பொருத்தமான அக்கூட்டினுள் செய்கை முறைகளும் காட்டப்படுதல் வேண்டும்.

★ அவசியமான இடங்களில் செய்கை முறைகள் காட்டப்படாவிடில் விடைகளுக்கு முழுப் புள்ளிகளும் வழங்கப்படமாட்டா.


01) கூட்டுக. $175 + 17.5 + 1.75$

02) 5.5 கிலோகிராம் நிறையுடைய தேயிலையிலிருந்து 50 கிராம் பொதிகள் எத்தனை ஆக்கலாம்?

03) சுருக்குக. $(-8) + (-3) + (-4)$

04) காரணி காண்க. $4x^2 - 1$

05) இங்கே காணப்படும் முக்கோணி ABC இன் சுற்றளவு யாது?





06) ஒருவர் ரூபா 2000 இற்கு வாங்கிய பொருள் ஒன்றை $12\frac{1}{2}\%$ இலாபம் வைத்து விற்றால் விற்றவிலை யாது?


07) 0.00745 என்னும் எண்ணை விஞ்ஞான முறைக் குறியீட்டில் எழுதுக?

08) சமன்பாடு $2x+y = 3$ இனால் காட்டப்படும் நேர்கோட்டின் படித்திறன் யாது?

09) உருவில் நிழற்றப்பட்ட பிரதேசத்தை எழுதுக.




10) உருவில் சரிவகம் ABCD யில் DC=17cm, AX=10cm அதன் பரப்பளவு $125cm^2$ எனின் ABயின் பக்க நீளத்தைக் காண்க?





11) $V^2 = U^2+2fs$ என்னும் சூத்திரத்தில் Uஐ எழுவாயாக்குக?


12) $x+1/x=5$ எனின் $x^2 + 1/x^2$ இன் பெறுமானம் யாது?

13) x இன் பெறுமானம் காண்க
$2^x \times 8^x = 1/16$

14) தரப்பட்ட உருவிலே AB//DE, Yஐ Xஇன் சார்பில் எடுத்துரைக்க.





15) தரப்பட்ட வரிப்படத்தில் DE//BC ஆகும். AD=6cm தரவை அவதானித்து ABயின் நீளத்தைக் கணிக்க.




16) $132_{நான்கு}$ என்னும் எண்ணை அடி பத்தில் எழுதுக?

17) தரப்பட்ட வட்டத்தில் மையம் Oஆகும். A,B,C,D என்பன வட்டத்தின் பரிதியில் உள்ள நான்கு புள்ளிகளாகும்.
I. Xஇன் பெறுமானம் யாது?
II. Yஇன் பெறுமானம் யாது?





18) தீர்க்க. $a^2-5a=0$

19) சுருக்குக. $1\ 1/2 \times 3/4 \div 1\ 1/4$


20) மடக்கை அட்டவணை பயன்படுத்தாமல் பெறுமானம் காண்க.
$\text{Log}_3 81 + \text{Log}_5 1/25$

21) வியாபாரி ஒருவர் ரூபா 10ஆன பங்குகளை ரூபா 12 படி வாங்குவதற்கு ரூபா 3900 ஐ செலவிட்டார்.
I) அவர் வாங்கக் கூடிய பங்குகள் எத்தனை?
II) இப்பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?


22) தரப்பட்ட வரிப்படத்தில் Aயிலிருந்து பார்க்கும் போது Bயின் திசைகோள் 290° ஆகும். எனின் Bயிலிருந்து பார்க்கும் போது A யின் திசைகோள் யாது?




23) உருவில் காணப்படும் செவ்வகத்தின் உச்சிகளை மையங்களாகக் கொண்டு நான்கு சமமட்ட விற்கள் வரையப்பட்டுள்ளன. அதில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவை கணிக்க.




24) மையம் A யையும் ஆரை 12 Cm ஐயும் கொண்ட வட்டமும் மையம் B யையும் ஆரை 5Cm ஐயும் கொண்ட வட்டமும் Cயிலும் Dயிலும் இடை வெட்டுகின்றன.
I) $A\hat{C}B$ இன் பெறுமானம் யாது?
II) AB யின் நீளம் யாது?





25) வகுப்பு ஒன்றில் உள்ள 40 மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளின் உத்தேச இடை 58 ஆகும். இப்புள்ளிப் பரம்பலின் மொத்த விலகல் (-100) ஆகும். உண்மை இடைப் புள்ளி யாது?

26) 1:50000 என்னும் அளவிடைக்கு வரையப்பட்ட கிடைப்படம் ஒன்றில் 8cm நீளத்தினால் காட்டப்படும் வீதி ஒன்றின் உண்மை நீளத்தை km இல் தருக?

27) தொடர் ஒன்றின் nஆம் உறுப்பு 7-4n ஆகும். இத்தொடரின் முதல் மூன்று உறுப்புக்களின் கூட்டுத்தொகையாது?

28) முழுக் கொடுப்பனவாக ரூபா 51000 இற்கு கொள்வனவு செய்யக்கூடிய குளிர்சாதனப் பெட்டியொன்றை வாடகைக் கொள்வனவு முறையில் உடன் கொடுப்பனவாக ரூபா 6000 ஐயும் மீதியை ஒவ்வொன்றும் ரூபா 3250 ஆன 15 சம மாதத் தவணைக் கட்டணங்களைச் செலுத்தியும் வாங்கலாம்.
I) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
II) வட்டியாகச் செலுத்தப்படும் மொத்தத் தொகை யாது?

29. செங்கோண முக்கோணி ABC யில் $A\hat{B}C = 90°$ $C\hat{A}B = \theta$ ஆகும். சைன் $\theta = 5/\sqrt{41}$ எனின் கோசை θ வைக் காண்க?




30. ஒரே ஆள்கூற்றுத்தளத்தின் பரும்படிப்படத்தின் மீது
I) சமனிலி $x>2$ இற்குரிய பிரதேசத்தை கிடைக் கோடுகள் வரைவதன் மூலமும்,
II) சமனிலி $Y \leq 3$ இற்குரிய பிரதேசத்தை நிலைக்குத்துக் கோடுகள் வரைவதன் மூலமும் நிழற்றிக் காட்டுக.

# ஜி.சீ.ஈ.(சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2004

## கணிதம் II 32 T II

**நேரம்: 3 மணித்தியாலயம்** **ஆக்கம்: சி.மதியழகன்**


**முக்கியம்: அறிவுறுத்தலுக்கமைய முதலாம் வினாவுக்கும் வேறு ஏழு வினாக்களுக்கும் விடை தருக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்திகளால் வெட்டி விடப்படாத சந்தர்ப்பங்களில் அவற்றுக்குப் புள்ளிகள் வழங்கப்படாது பரீட்சகரினால் வெட்டிவிடப்படும்.**

★ முதலாம் வினாவின் விடைக்கு அதன் ஒவ்வொரு பகுதிக்கும் 07 புள்ளிகள் வீதம் 42 புள்ளிகளும் மற்றைய வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 14 புள்ளிகளும் வழங்கப்படும்.

(01) (a) ஒருவர் ஆண்டுக்கு 8% பங்குலாபம் கொடுக்கும் ரூபா 20 பங்குகளை ரூபா 22 வீதம் வாங்குவதற்கு ரூபா 6600 ஐ முதலீடு செய்தார்.
(i) அவர் வாங்கிய பங்குகள் எத்தனை?
(ii) பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
(iii) வருட வருமானம் யாது?

(b) (i) காரணி காண்க
$2x^2 - 8y^2$
(ii) தீர்க்க $2x+5y = 35$
$x-2y = 4$
(iii) $M=I+\frac{D}{F}$ இல் Fஐ எழுவாயாக மாற்றுக?

(c) உருவில் காணப்படும் சரிவகம் ABCD இல் AB //CDஆகும்.




(i) கோணம் $B\hat{C}D = 70°$ எனின் கோணம் $A\hat{B}C$ இன் பெறுமானம் யாது? விடைக்குக் காரணம் தருக?
(ii) முக்கோணி DCA இற்கு பரப்பளவில் சமனான வேறொரு முக்கோணியைப் பெயரிடுக. உமது விடைக்குக் காரணம் காட்டுக?
(iii) AB=12cm, DC=10cm ஆகவும் AB, DCஆகிய பக்கங்களுக்கு இடையே உள்ள செங்குத்துத் தூரம் 8cm ஆகவும் இருப்பின் சரிவகம் ABCD இன் பரப்பளவைக் காண்க?

(d) பாடசாலை ஒன்றில் தரம் 11 மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் தண்டு - இலை வரைபில் காட்டப்பட்டுள்ளன.

| தண்டு | இலை |
|---|---|
| 0 | 4, 6, 7 |
| 1 | 2, 5, 7, 7, 9 |
| 2 | 3, 4, 5, 5, 8 |
| 3 | 4, 5, 6, 7, 9 |
| 4 | 0, 2, 3, 5, 5, 5, 7 |
| 5 | 6, 9 |

(i) 3ஆம் நிரையில் வகைக்குறிக்கப்பட்டுள்ள புள்ளிகளைத் தனித்தனியாக எழுதுக?
(ii) தண்டு - இலை வரைவில் குறிக்கப்பட்டுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(iii) ஆகாரப் புள்ளி யாது?
(iv) புள்ளித் தொகுயின் வீச்சு யாது?
(v) இடையப் புள்ளி யாது?
(e) ARRANGEMENT என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்களின் தொடை X எனின்
(i) தொடை X ஐ மூலகங்களுடன் எழுதுக?
(ii) n (X) யாது?
MESSAGE என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்களின் தொடை Y எனின்
(iii) X, Yஆகிய இரு தொடைகளையும் ஒரு வென்வரிப்படத்தில் காட்டுக?
(iv) Z={M,E,G,A} எனக் கொண்டு தொடை Z ஐ X,Yஆகியவற்றின் சார்பில் எழுதுக?
(f) (i) சுருக்குக. $\sqrt{50} + \sqrt{2} - \sqrt{18}$
(ii) X இன் பெறுமானம் காண்க. $3^x \times 27^x = \frac{1}{81}$
(iii) சுருக்குக. 3Log5 + 3Log2 - Log10

(02) (a) 18% வட்டி அறவிடும் நிறுவனம் ஒன்றில் ஒருவர் 4000 ரூபாவை முற்பணமாகச் செலுத்தி 28000 ரூபா பெறுமதியான இயந்திரமொன்றை வாங்கினார்.மிகுதிப் பணத்தை சமமான மாதத் தவணைகளாக 24 மாதங்களில் செலுத்த ஒப்புக் கொண்டார்.
1) அவர் கொடுக்க வேண்டிய மிகுதிப் பணம் எவ்வளவு?
2) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
3) ஒரு மாத அலகுக்கான வட்டி யாது?
4) மொத்த வட்டி எவ்வளவு?
5) ஒரு தவணைக்கான கட்டுப்பணம் எவ்வளவு?
(b) வங்கி ஒன்றிலிருந்து ஒருவர் 5% கூட்டு வட்டிக்கு 25000 ரூபாவைக் கடனாகப் பெற்றால் இரண்டு வருடங்களின் இறுதியில் செலுத்தவேண்டிய மொத்த வட்டி யாது?

(03) (i) AB=5cm, BC=7cm, கோணம் $A\hat{B}C=60^0$ ஆகவுள்ள முக்கோணி ABC ஐ அமைக்க?
(ii) A,B,Cஆகிய புள்ளிகளினூடாகச் செல்லும் வட்டத்தை அமைக்க?
(iii) AD=DC ஆகவும் கோணம் $A\hat{D}C=120^0$ ஆகவும் அமையுமாறு Dஐக் குறிக்க?
(iv) நாற்பக்கல் ABCD இன் பரப்பளவுக்கு சம பரப்புடைய முக்கோணி ABE ஐ வரைக. E என்பது நீட்டப்பட்ட BC இல் உள்ள ஒரு புள்ளியாகும்.
(v) AEஐ அளந்தெழுதுக?

(04) (a) வியாபாரியொருவர் 25% இலாபம் பெறக்கூடியவாறு பொருள் ஒன்றிற்கு விலை குறிக்கிறார். அதனை வாடிக்கையாளர் ஒருவருக்கு 10% கழிவு கொடுத்து ரூபா 450/= இற்கு விற்கிறார்.
(i) பொருளின் குறித்த விலை யாது?
(ii) பொருளின் கொள்விலை யாது?
(iii) வியாபாரி பெற்ற சதவீத இலாபம் யாது?
(b) ஒரு வானொலிப் பெட்டியை ரூபா 8960 இற்கு விற்பதனால் 12% இலாபம் பெறப்பட்டது. உற்பத்திச் செலவில் மூல்ப்பொருளுக்கும் கூலிக்கும் உள்ள விகிதம் 5:3 ஆகும்
(i) வானொலிப் பெட்டியின் உற்பத்திச் செலவை காண்க?
(ii) மூலப் பொருள் செலவு யாது?
(iii) கூலிக்கான செலவு யாது?

(05) (a) (i) ஒரு கூட்டல் விருத்தியில் 4ஆம் உறுப்பு 75 ஆகும். அதன் 10ஆம் உறுப்பு 117 ஆகும். முதல் உறுப்பு a பொதுவித்தியாசம் d எனக் கொண்டு இருசமன்பாடுகளைப் பெறுக?
(ii) a,d என்பவற்றைக் காண்க?
(iii) 14 ஆம் உறுப்பைக் காண்க?
(b) 15 m நீளமான கம்பியொன்று கூட்டல் விருத்தியில் அமையுமாறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டது. அத்துண்டுகளுள் மிகச் சிறியதன் நீளம் 5cm, மிகப் பெரியதன் நீளம் 25 cm ஆகும். வெட்டிய துண்டுகளின் எண்ணிக்கை யாது?
(c) 81, 27, 9, 3.... என்ற தொடரில்.....
(i) 7ஆம் உறுப்பு யாது?
(ii) முதல் 5 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?


(06) (a) சார்பு$Y=x^2-2x-3$ இன் வரைபை வரைவதற்குப் பெற்ற xஇனதும் yஇனதும் பெறுமானம் கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| X | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| Y | 5 | ... | -3 | -4 | .... | 0 | .... |


(i) மேற்குறித்த அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதிசெய்து அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.
(ii) வரைபுத் தாளில் xஅச்சு வழியேயும் yஅச்சு வழியேயும் 10சிறு பிரிவுகளினால் ஓர் அலகு வகைக் குறிக்கப்படுமாறு அளவிடையை எடுத்து மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.
(b) உமது வரைபைப் பயன்படுத்தி,
(i) அதன் சமச்சீர் அச்சை எழுதுக?
(ii) சார்பின் பெறுமானம் மறையாகும் xஇன் பெறுமான வீச்சை எழுதுக?
(iii) சார்பின் திரும்பற் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக?
(iv) சமன்பாடு $x^2-2x-5=0$இன் மூலகங்களைக் காண்க?

(07) (a) (i) சூத்திரத்தைப் பயன்படுத்தி அல்லது வாக்க நிறைவாக்கலின் மூலம் சமன்பாடு $x^2-2x-1=0$இன் தீர்வுகளைக் காண்க?
(ii) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க?
$\frac{12.73 \times \sqrt{7.253}}{0.0742}$
(b) (i) ஒரு வகுப்பில் உள்ள 5 ஆண்களிடையேயும் 4 பெண்களிடையேயும் இந்து மாமன்றம் ஒன்றிற்கு தலைவர், செயலாளர் தெரிவு இடம்பெற்றது. இத் தகவல்களை வெளிப்படுத்தும் மரவரிப் படத்தை வரைக?
(ii) இரு பதவிகளும் ஒரே பாலாருக்கு கிடைக்கக்கூடிய நிகழ்தகவு யாது?
(iii) தலைவர் ஆணாகவும் செயலாளர் பெண்ணாகவும் இருப்பதற்குரிய நிகழ்தகவு யாது?

(08) (a) அருகே வரிப்படத்தில் 56m நீள்கோட்டையும் இருமருங்கிலும் 28m விட்டம் கொண்ட அரைவட்டப் பகுதிகளையும் கொண்ட ஓடுபாதையொன்றின் அமைப்புக் காட்டப்பட்டுள்ளது.




(i) இம்மைதானத்தின் சுற்றளவு யாது?
(ii) இம்மைதானத்தின் பரப்பளவு யாது?
(iii) இம்மைதானத்தைச் சுற்றி வெளிப்புறமாக 3.5m அகலத்தில் பாதை ஒன்று அமைக்கப்படுகின்றது. பாதையின் பரப்பளவு யாது?
(b) வளைபரப்பு மேல்நோக்கித் துருத்திக் கொண்டிருக்கும் அரைக்கோள வடிவத் திண்மக் கண்ணாடி அடியைக் கொண்ட உருளை வடிவக்கண்ணாடிக் குவளை ஒன்றின் உயரம் 16cm உம் ஆரை 3.5cm ஆகும்.



(i) குவளையின் உட்பரப்பின் பரப்பளவைக் காண்க?
(ii) திண்ம அரைக்கோளவடிவ அடியின் கனவளவைக் காண்க?
(iii) 9cm உயரம் வரை குவளை நிரப்பப்பட்டிருக்கும் போது குவளையில் உள்ள நீரின் கனவளவைக் காண்க?


(09) (a) இராணுவத்துக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரர்களின் கிட்டிய நிறை kgஇல் தரப்பட்டுள்ளது.

| விண்ணப்பித்தவர்களின் நிறை(kg) | 55-59 | 60-64 | 65-69 | 70-74 | 75-79 | 80-84 | 85-89 |
|---|---|---|---|---|---|---|---|
| விண்ணபதாரர் எண்ணிக்கை(மீடிறன்) | 3 | 6 | 12 | 7 | 6 | 4 | 2 |


(i) ஆகார வகுப்பாயிடை எது?
(ii) இடையம் எந்த வகுப்பாயிடையில் உள்ளது?
(iii) வகுப்பாயிடை 70-74ஐ எடுகொண்ட இடையாகக் கொண்டு விண்ணப்பதாரர் ஒருவரின் இடைநிறையைக் காண்க?
(b) (i) அருகே வரிப்படத்தில் வட்டத்தின் மையம் O ஆகும்.
$A\hat{C}B = \frac{1}{2} A\hat{O}B$ என நிறுவுக?




(10) (a) ஒரு காணித்துண்டின் கிடைப்படத்தை வரைந்து கொள்வதற்கான களப் புத்தகத்திலுள்ள குறிப்பு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.




(i) 1cm, 10mஐ வகைக் குறிக்குமாறு கிடைப்படத்தில் வரைக.
(ii) கிடைப்படத்தின் பரப்பளவு ($cm^2$) இல் காண்க?
(iii) காணித்துண்டின் பரப்பளவை ($m^2$இல்) காண்க?
(b)




(i) தரப்பட்ட உருவில் $\sin 30^o$ உதவியுடன் AB யின் நீளம் யாது?
(ii) $\tan 30^o$ உதவியுடன் BCயின் நீளம் யாது?



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பவள விழா அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா மங்கள விளக்கேற்றி விழாவை ஆம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். விழாவுக்கு தலைமை வகித்த கல்லூரி அதிபர் சி.சிவனேஸ்வரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படம் : வலி.தென்மேற்குச் செய்தியாளர்)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

### யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்

2004ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களையும் அண் மித்த புள்ளிகளை எடுத்த மாணவர்களையும் இவர்களை வழிநடத்திய அதிபர், கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| 1. ஜெகதீஸ்வரன் லக்ஷின் | 157 புள்ளிகள் |
| 2. பழனியாண்டி துசாந் | 126 புள்ளிகள் |
| 3. றொஷானி சுந்தரம் | 142 புள்ளிகள் |
| 4. துளசி மகரசிங்கம் | 126 புள்ளிகள் |

(சி-38134) (26-19-46) - பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

## பாராட்டும் வாழ்த்தும்



உடுப்பிட்டி அ.மி.கல்லூரி மாணவன்

செல்வன் **த.செந்தாளன்**

2004ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரி சில் பரீட்சையில் 139 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் வாழ்த்தியும் நிற்கின்றோம்.

இமையாணன், உடுப்பிட்டி. அம்மம்மா, மாமாக்கள், அன்ரா, சித்தப்பா. (37453)(42)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புலோலி தெற்கு, கூவில் பரமேஸ்வரன் - றசிகலா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை மாணவனுமாகிய

செல்வன் **றஜீந்த் பரமேஸ்வரன்**

2004 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகள் பெற்றுள்ளார். இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்கள்:

அக்கா றஜீதா, தங்கை சுஜீதா, தம்பி சுஜீந்த், பெரியப்பா சிவானந்தம் குடும்பம் (நோர்வே), பெரியப்பா ஈஸ்வரநாதன் குடும்பம் (துன்னாலை), மாமா பாஸ்கரன் குடும்பம் (ஜேர்மனி), மாமா ஜெயசேகரம் குடும்பம் (லண்டன்), மாமா யோகநாதன் குடும்பம் (G.S.O), அப்பப்பா கபிரியல் குடும்பம், அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா.

புலோலி தெற்கு, புலோலி. (37449)(39-19-46-26)

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**12.10.2004 - 17.10.2004 வரை**

முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

இளைஞர்களே!

☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம் ☆ ஆளுமைக்குறைவு ☆ நடுக்கம் ☆ நித்திரைக் குறைவு என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள், ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சைபெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதிநேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம் S.M.P.**

A.S.N. சுற்றுலா விடுதி,

392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).

Govt. Regd. No. 9492

Hot Line: 0777 569205

T.P.: 3181, 5399.

(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).

(சி-38047)(26-19-46)

### பிரிட்டனுக்கான தூதுவர் பதவி விலகுவதாக அறிவிப்பு

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் பாயிஸ் முஸ்தபா இவ்வருட இறுதியுடன் தமது பதவியை ராஜினாமாச் செய்யவிருப்ப தாக அறிவித்துள்ளார்.

2002 இல் ஐ.தே.க.ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்துக்கான இலங்கைத் தூதுவராக இவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவரின் பதவிக் காலம் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை உள்ளது.

எனினும், தனது பதவிக்காலம் முடிவடைய முன்னர் தான் பதவியிலிருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார். தனது முடிவு குறித்து ஜனாதிபதிக்கும் வெளிவிவகார அமைச்சருக் கும் அறிவித்துள்ளதாகவும் முஸ்தபா மேலும் தெரிவித்தார். (க-8)

### மேலும் 4 பிரதியமைச்சர்கள் விரைவில் நியமிக்கப்படலாம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அர சில் நான்கு பேர் பிரதியமைச்சர்களாக நிய மிக்கப்படவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

சமூகநலன் பிரதியமைச்சராக எஸ்.எம்.சந் திரசேனவும், புனர்வாழ்வுத்துறைப் பிரதிய மைச்சராக மேர்வின் சில்வாவும், தொழிற் துறைப் பிரதியமைச்சராக தமு தஸநாயக்கா வும், கிழக்கு மாகாண பிரதியமைச்சராக உஸைன் பைலா அஹ்மத்தும் நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நியமனங்கள் இவ்வாரம் இடம் பெறலாம் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-8)

### பாராட்டு வைபவம்

பாடசாலை ரீதியாக 21 வயதிற்குக்கீழ் தேசிய மட்டத்தில் நடைபெற்ற குண்டெறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற யாழ்.கனக ரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவி செல்வி தர்சினி குணரத்தினத்தின் பாராட்டு வைபவம், இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அதிபர் விமாணிக்கம் தலைமையில் யாழ்கனகரத் தினம் மத்திய மகாவித் தியாலயத்தில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ் வில் வாழ்த்துரைகளை - யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். பல்கலைக் கழ கத் துணைவேந்தர் கலாநிதி சு.மோகன தாஸ், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கி னேஸ்வரன், யாழ். மாவட்ட அரசி யல்துறைப் பொறுப் பாளர் சி.இளம்பரிதி, உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா, பழைய மாணவர் சங்கத் தலைவர் சிவிகேசிவ ஞானம், நல்லூர் கோட் டக் கல்விப் பணிப் பாளர் சு.சுகபேயன் ஆகியோர் நிகழ்த்து வார்கள். (8-ரி)

### சென்.ஆன்ஸ்'க்கு புதிய மாடிக் கட்டடம்

மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத் தோலிக்க த.க.பாட சாலைக்கு மூன்று மாடிக் கட்டடம் நிறு வும் திட்டத்தின்கீழ் தற்போது இரண்டாம் மாடி அமைப்பதற் கான கட்டட வேலை கள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. கல்வித் திணைக் களத்தின் பி.எஸ்.டி. ஜி. என்ற திட்டத்தின் கீழ் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளதாக பாடசாலை அதிபர் அருட்சகோதரி அழகேஸ்வரி செபஸ் தியாம்பிள்ளை தெரி வித்தார். (8-135)

## காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி நிதிக்கான
## சீட்டிழுப்பின் முடிவுகள்

பரிசுக்குரிய இலக்கங்கள்:

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 1863 |
| இரண்டாம் பரிசு: | 1126 |
| மூன்றாம் பரிசு: | 633 |

10ஆறுதல் பரிசு இலக்கங்கள்

718, 310, 1850, 020, 1979, 500, 645, 1829, 1703, 1325.

குறிப்பு: 15-10-2004 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் பரிசுக்குரியவர்கள் காரை/வெடியரசர் வீதி, அம்பாள் க.தொ.கூ. சங்கத்தின் கட்டடத்தின் சமாச அலுவலகத்தில் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

காரைநகர் பி.க.கூ.ச.சமாசம், காரைநகர். (37452) (26-19-46) பொ.கணேசு, செயலாளர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சண்முகம் பாலசுந்தரம்**

(சிவராசா)

பிறப்பு: 27-04-1959

இறப்பு: 24-09-2003

திதி: 12-10-2004

ஆண்டு ஒன்று போனதைய்யா!
துயரங்கள் குறையவில்லை!
ஆற நினைக்கிறோம்
அது எம்மால் முடியவில்லை!
என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

வரணி வடக்கு, வரணி. (37411) (26-19-46)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13 - 11 - 1916

மறைவு 24 - 09 - 2003

**பண்டிதர் பிரம்மஸ்ரீ ச.பஞ்சாக்ஷர சர்மா**

வர்ஷாப்திகம் 12-10-2004

"நீங்கள் காட்டிய வழியில் உங்கள் நினைவோடு நாங்கள் நடக்கின்றோம்."

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(37455) (26-19-46)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 26 - 03 - 1924

இறப்பு 12 - 09 - 2004

**திருமதி செல்லையா தங்கம்மா**

பரம்பரைக்கே வளரப்பிறந்த தாயே!
நெஞ்சமெல்லாம் நிதம் தவிக்க
நெடுந்தூரம் போனாயோ! அம்மா!!
விஞ்சுகின்ற துயரத்தில் நாம் தவிக்க
விண்ணுலகு சென்றுவிட்ட எங்கள்
மண்ணுலகத் தெய்வமே!
எம் உறவுக்குள் உறங்கிய அனுபவமே!
உனைத் தேடுகிறோம் உனையிழந்து!

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (12.10.2004) செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்ற அந்தியேட்டி நிகழ்விலும் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்தியாலை, கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

தகவல்: கி.சுந்தர் (லண்டன்)

அன்பு மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள். (37407)(39-19-46-26)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலடி, சாவகச்சேரி. (37423)(39-19-46-26)

அமரர்

**பூமணி வைத்திலிங்கம்**

தாயின் மடியில் 11-09-1932

இறைவன் அடியில் 11-10-1996

சாவகச் சேரியூர் சாம்பவி அம்மன்
முத்து மாரியின் முதல்பெரும் தொண்டர்
காலங் காலமாய்க் கண்ணிமைக் காது
சரியைத் தொண்டுகள் சாற்றிய தாயார்
பூமணி யென்னும் பொற்புடை நல்லாள்
அமர பக்குவம் அடைந்ததற் காலை
கனவிற் றோன்றிய காஹினி யம்மன்
"சிவராசா வென்னும் செல்வப் புதல்வா!
நவராசா கோபுரம் நலம்பெறத் தருவாய"
பன்னிய கூற்றைப் பண்ணாய்ச் செய்வேன்
ராஜ கோபுரம் ரதமாய் அமைவுறும்
அன்னையென் தாயின் ஆத்ம சாந்தியும்
ஆசீர் வாதமும் அமைத்திடு வாயே!

என்றும் உம்மை நினைவுகூரும்:

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

## கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க ஆளுநர் சபை தெரிவு

வட்டக்கச்சி,ஒக்.12

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 3ஆம் திகதி செஞ்சிலுவைச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய ஆளுநர் சபைத் தெரிவும் இடம்பெற்றது. புதிய ஆளுநர் சபையின் தலைவராக சி.கார்த்திகேசு, செயலாளராக த. கார்த்திகேசு, பொருளாளராக தி.அபராஜிதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆளுநர் சபை உறுப்பினர்களாக ச.பொன்னுத்துரை, ச.சந்திரசேகரம், த.இராசரத்தினம், இ.செல்வராசா, போ.தங்கராசா, தி.தணிகாசலம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்,செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்டோர் போட்டியிட்டதால் தேர்தல் மூலமே இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (4-205)

### கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில்

# 118 ஆங்கில ஆசிரியர்கள் தேவை 12 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்

## வலயக் கல்விப் பணிப்பாளர் கவலை


வட்டக்கச்சி,ஒக்.12

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 98 பாடசாலைகளுக்கும் 118 ஆங்கில ஆசிரியர் தேவை. ஆனால், தற்போது 12 ஆசிரியர்களே கடமையில் உள்ளனர். இவர்களைக் கொண்டு ஜி.சீ.ஈ.(உ/த) வகுப்புக்களைக் கொண்ட 20 பாடசாலைகளிற்கு ஒவ்வோர் ஆசிரியரைக் கூட நியமிக்க முடியாதுள்ளது. இவ்வாறு கவலை தெரிவித்தார் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம்.

கடந்த 6ஆம் திகதி கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

இவ்வாறாக ஒவ்வொரு பாட ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறையாகவே உள்ளது. எமது மாவட்டக் கல்வி நிலை பற்றி கல்வி அமைச்சின் உயரதிகாரிகள் அக்கறை காட்டவில்லை. எமது மாவட்ட ஆசிரியர்களுக்கு எவ்வித வசதிகளையும் ஏற்படுதிக் கொடுக்காமல் அவர்கள் மீது பல சுமைகளைச் சுமத்துகின்றோம். இந் நிலையில் இந்த ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுகிறோம். இது மனவேதனையானது.

பாடசாலைகளும் எதுவித வசதிகளும் இன்றியே இயங்கிவருகின்றன. இவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க உதவி வழங்கும் நிறுவனங்களிடம் கையேந்தியிருக்கிறோம் - என்றார். (8-405)






கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளுக்கான கிராம அபிவிருத்தி தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் அண்மையில் ஊரியான் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி த.மீரா, கிளி. மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.கலைமகள், கண்டாவளைப் பிரதேச கிராம அலுவலர் கா.ஐங்கரவேல் ஆகியோரையும், நிகழ்வில் கலந்துகொண்டு பயிற்சிபெற்ற பயிற்சியாளர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள் : பரந்தன் செய்தியாளர்)*

## விவசாய உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கான விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை கிளிநொச்சி கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.வ.இராசலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி.இராசநாயகம், நிக்கொட் நிறுவனப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பார்த்தீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் இப்பகுதி விவசாயிகளுக்கு 16 இருசில்லு உழவு இயந்திரங்கள், 40 நீர் இறைக்கும் இயந்திரங்கள், 40 மருந்து தெளிக்கும் கருவிகள் மற்றும் 8 இயந்திரம் மூலம் மருந்து தெளிக்கும் கருவிகள் என்பன வழங்கப்படவுள்ளதாக பூநகரிப் பிரதேச கமநல உத்தியோகத்தர் என்.சுந்தரமூர்த்தி தெரிவித்துள்ளார். (8-5-403)

# சிறப்புற நடைபெற்றது கிளி.மாவட்ட ஆசிரியர் தினவிழா

வட்டக்கச்சி,ஓக்.12

கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆசிரியர் தின விழா கடந்த 6ஆம் திகதி மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் 600இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கிளிநொச்சி முருகன் ஆலய முன்றலில் ஒன்று கூடி அங்கு விசேட பூசைகள் நடைபெற்று மங்கள வாத்திய இசையுடன் ஏ-9 வீதி வழியாக ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். பின்னர் கிளிநொச்சி புனித திரேசா ஆலயத்தில் வண. பிதா தேவசகாயம் அடிகளாரால் விசேட ஆராதனைகள் நடத்தப்பட்ட பின்னர் ஆசிரியர்கள் அனைவருக்கும் மாலை அணிவித்து ஊர்வலமாக கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் எஸ்.ஜீவராஜ் ஏற்றிவைத்தார். கல்வி மேம்பாட்டு நிதியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டு நிதியத் தலைவர் இ.கணேசபிள்ளை ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் க.சின்னத்தம்பி, கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினமும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து ஆசிரியர்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழ் ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட எழுத்தாக்கத்திறன் போட்டியில் கிளிநொச்சி வலயத்தில் வெற்றி பெற்றோருக்கும், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் தமிழ் மொழிப் பிரிவினரால் உலக ஆசிரியர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற ஆசிரியர்களுக்குமான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. (8-405)

## புதிய உப அஞ்சல் அலுவலகம் திருவையாறில் திறப்பு

திருவையாறு பிரதேசத்திற்கான புதிய உப அஞ்சல் அலுவலகம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

தொடர்ச்சியான யுத்த நடவடிக்கைகளால் பல்வேறு இடங்களில் இயங்கிவந்த இவ் தபாலகம் மீண்டும் புதுப்பொலிவுடன் புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து அனைத்துப் பணிகளும் புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிரந்தர அலுவலகத்தால் மக்கள் பெரிதும் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (8-393)

## மன்னாரில் வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமையில் மூடப்படும்

மன்னார்,ஒக்.12

மன்னார்ப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுவதற்கு, மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அந்த ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை மூடுவது போல் மன்னார்ப் பகுதிகளிலும் வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் மூடவேண்டும் என அந்த அறிக்கையில் ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது. (8-ரி)




# இந்தியக் கலைஞர்களின் உதவியுடன் ஆசிரியர்களுக்கான நாடகப் பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி, அழகியல் கலாமன்றத்தினரின் ஏற்பாட்டில் இந்தியக் கலைஞர்களான ச.சந்திரசேகரன் (பிரளையன்), வ.விநாயகம் ஆகியோரின் உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்கான நாடகப் பயிற்சிப் பட்டறை கடந்த 2ஆம், 3ஆம் திகதிகளில் அழகியல் கலாமன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

அழகியல் கலாமன்ற அதிபர் க.விஜயசேகரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாலை 6 மணிவரை நாடகப் பயிற்சி பட்டறை நடைபெற்றது.

இரவு 9.30 மணிக்கு அழகியல் கலாமன்ற மண்டபத்தில் இந்தியக் கலைஞர்களை தமிழீழ கலைஞர்களும் எழுத்தாளர்களும் சந்தித்தனர்.

மறுநாள் 3ஆம் திகதியும் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை நாடகப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இதன்பின்னர் இந்தியக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். (8-405)

# கால்நடை சிறுசிகிச்சை நிலையம் விசுவமடுவில் திறந்து வைப்பு

விசுவமடு,ஒக்.12

கால்நடை சிறுசிகிச்சை, தீவன விற்பனை நிலையத்திறப்பு விழா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர் உதயகுமார் தலைமையில் கடந்த வாரம் விசுவமடுவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கல விளக்கினைக் கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் காசிநாதன், முன்னோடி கால்நடைப் பண்ணையாளர் இளங்கோவன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திலகன் ஏற்றிவைத்தார்.

நிலையப் பெயர்ப்பலகையினை முத்தையன்கட்டுப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் சண்முகராசா திரைநீக்கம் செய்துவைக்க விசுவமடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் சச்சிதானந்தம் நாடாவினை வெட்டி நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். (8-ரி)



கரைச்சி வடக்கு ப.நோ. கூ. சங்கத்திற்கு மூன்று மாடிகளைக் கொண்ட புதிய தலைமைப் பணிமனை ரூபா தொண்ணூறு லட்சம் செலவில் பரந்தன் சந்தியில் உள்ள சங்கத்திற்குரிய காணியில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கட்டடத்துக்கான அடிக்கல் நடுவதைப் படத்தில் காணலாம். *(படம்: கிளிநொச்சி செய்தியாளர்)*

## கிடுகுகள் வாங்க நிதியுதவி

திருவையாறு,ஒக்.12

'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் நிதியுதவியுடனும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடனும் பின்தங்கிய கிராம மக்களுக்கு கிடுகுகள் வழங்கப்படவுள்ளன.

பருவமழை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதால் பழுதடைந்த கூரைகளை திருத்துவதற்காக கிளிநொச்சி மாவட்டத்தின் 8 கிராமங்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

மாயவனூர், ஆலடி ஆகிய கிராமங்களில் 150 பயனாளிகளுக்கும், கோணாவில், காந்தி கிராமம், யூனியன் குளம் ஆகிய கிராமங்களில் 200 பயனாளிகளுக்கும், பொன்நகர், தொண்டமான் நகர் கிராமங்களில் 150 பயனாளிகளுக்கும், கோரக்கன்கட்டுக் கிராமத்தில் 50 பயனாளிகளுக்கும் இவ்வுதவி வழங்கப்படவுள்ளது. (8-393)

## 'பச்சை வயல் கனவு' நூல் வெளியீட்டு விழா

வட்டக்கச்சி,ஒக்.12

தாமரைச்செல்வியின் 'பச்சை வயல் கனவு' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த 3ஆம் திகதி பிற்பகல் 3.30மணியளவில் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் தமிழீழத் தேசியக் கொடியினை பெண்கள் ஆய்வு அபிவிருத்தி நிறுவனப் பொறுப்பாளர் குகா ஏற்றிவைத்தார். வெளியீட்டுரையினை கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க செயலாளர் வே.பரமநாதபிள்ளை நிகழ்த்தினார். நூலினை வேூசுப்பிரமணியம் வெளியிட்டுவைக்க முதற் பிரதியை கரைச்சி பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் பெற்றுக் கொண்டார். (8-405)

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
## நூற்றாண்டு விழா – போட்டிகள்

18 வயதுப் பாடசாலை அணிகள்

1. உதைபந்தாட்டம் ஆண்
2. வலைப்பந்தாட்டம் பெண்
3. கிரிக்கெற் - மென்பந்து ஆண்

விண்ணப்ப முடிவுதிகதி: 20.10.2004 பி.ப. 4 மணி
அணித் தெரிவு: 22.10.2004 பி.ப. 1.30 மணி
(பாடசாலைப் பிரதிநிதி ஒருவர் நேரில் வரவும்)

தலைவர்/செயலாளர்,
நூற்றாண்டு விழாச்சபை,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

11.10.2004
(38149)(42-46-18)



The Wardrobe
t-shirt showroom



The Wardrobe
Simply Amazing !
T-Shirt Showroom

ஏற்றுமதி தரம் வாய்ந்த T-Shirt தயாரிப்புகள் யாழ் மண்ணில் அறிமுகமாகின்றது

120 க்கும் மேற்பட்ட design கள், 10க்கு மேற்பட்ட showroom கள் உடன் இயங்கும் உலகத் தரம் வாய்ந்த Vilka நிறுவனத்தின் ஏக முகவர்கள்

The Wardrobe
t-shirt showroom

பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், நிறுவனங்களின் இலட்சினை பொறித்த T-Shirts & Caps குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்

முதல் முறை வருவது
~ எங்களால்
மறுமுறை வருவது
~ உங்களால்

149/1 Kasturiyar Road,
Jaffna.
Tel: 077 77 55 037


## தொலைத்தொடர்பு நிலையத்தில் திருட்டு

கோண்டாவில் சந்தியில் உள்ள தொலைத தொடர்பு நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த முப பாதாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு கைத்தொலைபேசிகள், பாவிக்கப்படாத புதிய 'கிற்காட்'டுகள் என்பனவும் அடங்கும். இச்சமபவம் கடந்த 9ஆம் திகதி நள்ளிரவு வேளையில் இடம்பெற்றுள்ளது. (8-49)

## சிறுவர், முதியோர் தினவிழா

சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் சங்கானைப் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.செயலக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்புவிருந்தினர்களாக யாழ்.செயலக உதவி அரச அதிபர் வீ. வீரபத்திரபிள்ளை மற்றும் என்.வேலும்மயிலும் ஆகியோரும் -

வலி.மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு, திருமதி பொ.இராஜேஸ்வரன், சங்கானை வர்த்தக சங்கத் தலைவர் அஹ்ரீதரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் முதியோர்கள் கௌரவிக்கப்படுவதுடன் பாடசாலை மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவருக்கான பரிசில்கள் வழங்கலும் நடைபெறும். (8-20-203)

## வீதி விளக்குகள் தொடர்பான கூட்டம்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மின் விளக்குகளை மீளப் பொருத்துவதற்காக யாழ்.மாநகரசபையினால் தெரிவுசெய்யப்பட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி 3 மணிக்கு மாநகர ஆணையாளர் கலாநிதி குணராசா தலைமையில் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகளை மீளப் பொருத்துவதற்கு 'நிகொட்' திட்டத்தின் கீழ் 68 லட்சத்து 54 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை உடனடியாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கை மின்சார சபை அதிகாரிகள், யாழ்.அரச அதிகாரிகள் - நல்லூர், யாழ்ப்பாணப பிரதேச செயலக செயலாளர்கள், 'நிகொட்' பிரதிநிதிகள் ஆகியோரும் இக்கூடடதில் கலந்துகொள்ளவுள்ளனர். (8-7)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் அபிநயன்

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மயூரன் - வதனி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் அபிநயன் இன்று (12.10.2004) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் முதலாவது பிறந்ததினத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்புள்ளங்களான அப்பா, அம்மா, அப்பப்பாமார்,அப்பம்மாமார், தாத்தாமார், அம்மம்மாமார், பூட்டியம்மா, சுவிஸ் பெரியமாமா, பெரியமாமி, மச்சான், சின்னமாமா, சின்னமாமி, கொலண்ட் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, இலங்கை ஆசையப்பா, ஆசையம்மா, அண்ணா, ஜஸ்மினி, பெரியப்பாமார், பெரியம்மாமார், லண்டன் ஆசையப்பா, சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வேலவன் அருளோடும், காளித்தாயின் ஆசியோடும் ஆயிரம் பிறைகண்டு சகல வளங்களும் பெற்று பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

தகவல் :
மயூரன் குடும்பம்.

(37463) UTHAYAN Graphics



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1955 - 10 - 26 | 2004 - 09 - 12 |



அமரர்
### செல்லத்துரை சிவகுமார் (வவா)
(கடை உரிமையாளர் - இருபாலை)

ஆருயிர் அப்பாவே! எங்கள் அன்புத் தெய்வமே!
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீரோ?
ஆயிரம் கனவு கண்டோம் அப்பா! ஆண்டவன் தனது
திருவடியில் சேர்த்தே விட்டான்! தினம் தினம் வேண்டுகின்றோம்
தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைவதற்கே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகன் சிவகுமார் 12. 09. 2004 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

செ. செல்வக்குமார் (கனடா) அவர்களின் அன்புச் சகோதரரும் யசீந்திரன் (யாழ். இந்துக் கல்லூரி தரம் 11 - மாணவன்), தனுஷா (யாழ். இந்து மகளிர் கல்லூரி தரம் 10 - மாணவி), துவாரகன் (யாழ். பரியோவான் கல்லூரி தரம் 7 - மாணவன்), கவிபரன் (யாழ். கோப்பாய் நாவலர் வித்தியாலயம் தரம் 4 - மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (12. 10. 2004) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது. இந்நிகழ்வில் எமது உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அமரரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

V.C.லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

- தாய், மனைவி, மக்கள்.

(38471)(42-46-18)



## முதலாம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

| அன்னையிடம் | ஆண்டவனிடம் |
|---|---|
| 03 - 07 - 1960 | 12 - 10 - 2003 |



### திருமதி தயாபரி ஆனந்தகுமார்
(பானு காமன்ஸ்)

எங்கள் குலவிளக்கே தயா!
ஆண்டொன்று ஓடி விட்டால் ஆறி விடுவோமா நாம்?
மீண்டொருகால் வந்தெம்மை அரவணைக்க மாட்டீரோ?
அம்மா! அம்மா! வென்று.....

மூத்த மகன் சங்கர் மனமுடைந்து தவிக்கின்றான்
ஆசை மகன் பானு படும்துயரோ அளவில்லை
செல்ல மகள் மேனி நெஞ்சடைக்க விம்முகிறாள்
எங்கு சென்றீர்? எங்கு சென்றீர்?

ஆனந்தமுடன் வாழ்வென்று ஆசையாய் வந்த அன்பே!
பாதி வழி வந்து மின்னலாய் மறைந்து விட்டீர்
மீதிவழி போக நீரூர வழி காட்டுமம்மா!

உறவெல்லாம் கதறியழ ஊரெல்லாம் கண்கலங்க
காலனவன் கடுகதியில் கவர்ந்ததென்ன மாயமம்மா?
கலங்கி நிற்கும் எங்களுக்குக் காலமெல்லாம்
கைகொடுத்துக் காத்து நிற்பீர் அம்மா!
வணங்குகிறோம் - உம் ஆத்மா சாந்தி பெற
வேண்டுகின்றோம் இறைவனையே!


இல.11, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்புக் கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(37470)(42-18-46)

யாழ்ப்பாணம்





# சந்தேகத்துக்கு இடமில்லை: இவர் இன்னமும் சாதிப்பார்!

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் குண்டெறிதல் நிகழ்வில் தங்கப்பதக்கம் பெற்று பெருமை சேர்த்தவர் குணரட்ணம் தர்சினி.

யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மாணவியான இவர் கடந்த 30 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற 21 வயதுப் பிரிவினருக்கான குண்டெறிதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அவரது விளையாட்டு அனுபவங்களைப் பற்றிக் கேட்டோம்:-

சரசாலை, சாவகச்சேரியைச் சேர்ந்த நான் தற்போது சுண்டுக்குளியில் வசித்து வருகின்றேன். ஆரம்பக்கல்வியை மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கற்றேன். உயர்தரக் கல்வியை யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலத்திலும் கற்று வருகின்றேன்.

## செல்வி: மதியழகி, நவம்

2004 கலைப் பிரிவில் கல்வி கற்கும் எனக்கு ஓர் அக்கா, ஒரு தம்பி, என்னோடு சேர்த்து எனது குடும்பம் ஐந்து பேரைப் கொண்டது.

*கேள்வி:* விளையாட்டுத் துறையில் குண்டெறிதல் நிகழ்வில் மட்டும் ஈடுபடக்காரணமென்ன?

*பதில்:* பொதுவாக விளையாட்டுத் துறையில் நான் ஈடுபட எனது பெற்றோர்தான் முதற் காரணம். எனது அப்பா விளையாட்டுத் துறையில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். ஆனால் தன்னை வளர்த்துக்கொள்ள தனக்குக்கிடைக்காத வசதி வாய்ப்புக்களை எனக்கு ஏற்படுத்திக்கொடுத்து நான் வளர உதவி செய்கிறார்.

அவரது இந்த அவாவும் விருப்பமுமே என்னை வீராங்கனையாக உருவாக்கியது.

நான் குண்டு எறிதலில் பங்குகொண்டு வெற்றி பெற்றதற்கு முக்கிய காரணம் அப்பாவுக்கு அந்த விளையாட்டில் உள்ள ஆர்வம்தான்.

*கேள்வி:* விளையாட்டுத்துறையில் பெற்ற சாதனைகள் பற்றி...?

*பதில்:* எனது 15 ஆவது வயதிலேயே விளையாட்டுத்துறைக்குள் பிரவேசித்துவிட்டேன். 2001 ஆம் ஆண்டு 17 வயதின் கீழ்ப் பிரிவில் குண்டெறிதல் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்றதோடு தேசியமட்டப் போட்டிக்கு பங்கு பற்றத் தகுதியும் கிடைத்தது. இதுவே விளையாட்டுத்துறைக்குள் பிரகாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்குள் ஏற்படுத்தியது.

2002 ஆம் ஆண்டு 19 வயதுப் பிரிவின் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாகாணமட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டேன். 2003 ஆம் ஆண்டு19 வயதின் கீழ் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் மாகாணமட்டத்தில் மூன்றாம் இடதையும் பெற்றேன். தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

இவ்வருடம் கழகங்களுக்கிடையிலான தேசியமட்டப் போட்டியிலும் கலந்துவெற்றி பெற்றேன். இதன் தொடர்ச்சியாகத்தான் இவ்வாண்டு தேசிய மட்டக் குண்டெறிதல் போட்டியில் முதலிடம் பெற்றுத் தங்கப் பதக்கத்தையும் வென்றேன்.

*கேள்வி:* கடந்த காலங்களில் இப்படியான போட்டிகளில் பங்கேற்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா?

*பதில்:* கடந்த நான்கு வருடங்களாக மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றேன்.

2002 ஆம் ஆண்டு தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்பதற்குத் தெரிவு செய்யப்பட்டேன். பொருளாதார நிலைமை இடம்கொடாத காரணத்தால் அந்தப் போட்டியில் கலந்துகொள்ளவில்லை.

கொரியாவில் இடம்பெற்ற சர்வமதங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்கு ஏற்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை.

ஆரம்பத்தில் எனக்கு குண்டெறிதலில் வழிகாட்டவோ, ஆலோசனை கூறவோ யாரும் அற்ற துர்ப்பாக்கிய நிலையே இருந்தது.

*கேள்வி:* இந்த தேசிய மட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றும் போது எத்தகைய மன நிலை ஏற்பட்டது. ?

*பதில்:* மாவட்ட மட்டத்தில் 7.40 மீற்றரையும் மாகாண மட்டத்தில் 8.30 மீற்றர் தூரமும் எறிந்தேன்.

தேசிய மட்டம் சென்று இறுதி நிகழ்வில் நான் எறிந்த முதலாவது தூரம் 8.93 மீற்றர். என்னுடன் கூட எறிந்தவர்கள் கூடியதூரமாக 9.25 மீற்றர் எறிந்து இருந்தார்கள். நான் முயற்சிசெய்தால் முதலாம் இடத்தைப் பெற முடியும் என்ற எண்ணம் மைதானத்தில் ஏற்பட்டது.

தொடர்ந்து நான் 3ஆவது தடவை எறியும் போது 9.25 மீற்றர் தூரம் எறியக் கூடியதாக இருந்தது. நான்காவது தடவையில் நான் 9.66 மீற்றர் தூரத்தை எறிந்து வெற்றி பெற்றேன்.

*கேள்வி:* உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பயிற்றுவிப்பாளர்கள் பற்றி..?

*பதில்:* ஆரம்ப பயிற்சியை எனது பாடசாலை ஆசிரியர்களிடமிருந்தே பெற்றுக்கொண்டேன். அவர்களின் வழிகாட்டல்தான் இத்துறையில் முன்னேற உந்து சக்தியாக இருந்தது.

தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டபின் யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்தில் மேலதிக பயிற்சிகளை பெற்று வருகிறேன்

உடற் தகுதி சம்பந்தமான பயிற்சிகளை விளையாட்டு உத்தியோகத்தர் செ.றமணனும் நுட்பங்கள் சம்பந்தமான பயிற்சியை விளையாட்டு உத்தியோகத்தர் பா.கிருபாகரனும் மேலதிக ஆலோசனைகளை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் ராஜசிங்கமும் வழங்குகின்றனர்.

இவர்களது வழிகாட்டல்தான் தேசிய மட்டப் போட்டியில் என்னை தங்கப் பதக்கம் பெறவைத்தது.

இது மட்டுமின்றி என் சக சிரேஷ்ட மெய்வல்லுநர்களும் எனக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றார்கள்.

*கேள்வி:* விளையாட்டுத்துறையில் நீங்கள் ஈடுபட்டு வெற்றி பெற்றீர்கள். இத்துறை ஈடுபாடு கல்விக்குத் தடையாக அமையுமா?

*பதில்:* கல்வியும் விளையாட்டும் மனிதனை நிறைவானவனாக வளரவைக்கிறது. விளையாட்டின் மூலம்தான் உடல் வலுப் பெறுகிறது.

இது எப்படி கல்விக்குத் தடையாக இருக்க முடியும்.

*கேள்வி:* இத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?



*பதில்:* கல்வி, விளையாட்டு ஏதோ ஒன்றில் ஈடுபடாது இரண்டிலும் முன்னேற வேண்டும். ஆரம்பத்தில் வெற்றி கிடைப்பது கடினம். பரிசு பெறுவது சந்தேகம். "முயற்சி திருவினையாக்கும்" தளராது வெற்றியை அடைய தொடர் பயிற்சிகளும் ஆர்வமுமே தேவை.

இத்துறையில் முன்னேற நல்வழிகாட்டிகளின் செயல் ஊக்கத்துடன் முன்னேறி னால் வெற்றி நிச்சயம்.

*கேள்வி:* எதிர்காலத்திட்டம் பற்றி..?

*பதில்:* தொடர்ந்து சர்வதேச ரீதியில் வெற்றி பெற்று விளையாட்டுத் துறையில் சாதனை படைக்கவேண்டும். தேசிய மட்டத்தில் ஏற்கனவே இருக்கின்ற சாதனையை முறியடித்துப் புதிய சாதனையை நிலை நாட்ட வேண்டும் இதுவே எனது ஆசை. ❋




# அத்தியார் இந்துக் கல்லூரி நடத்திய கரப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின பவள விழாவை முன்னிட்டு பாடசாலைகள், கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற கரப்பந்தாட்ட போட்டி இறுதியாட்டம் அத்தியார் இந்துக கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மகாஜெனக் கல்லூரி, நடராசா இராமலிங்கம் வித்தியாலயத்தை 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, மகாஜெனக் கல்லூரியை 2:1 என்ற செற் கணக்கில் வென்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

கழகங்களுக்கிடையிலான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டு கழகம், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகதை 3:2 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று பவளவிழா சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. (8-190)



யாழ் மாவட்ட கராத்தே சங்கத்தின் எற்பாட்டில் கடந்த சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கராத்தே சுற்றுப்போட்டியில் வீரர்கள் இருவர் மோதிக்கொள்ளும் காட்சி இது. *படம்: வலி.வடக்குச் செய்தியாளர்.*

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.12

தீவக கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

★ புங்குடுதீவு மகா வித்தியாலயம் எதிர் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.

★ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம்.

★புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம் எதிர் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.

★ புங்குடுதீவு மகாவித்தியாலயம் எதிர் புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம்.

★ காரைநகர் காலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் எதிர் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

★ புங்குடுதீவு மகா வித்தியாலயம் எதிர் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

**18வயதுப் பிரிவு**

★ வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம் எதிர் நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

★ நெடுந்தீவு மகா வித்தியாலயம் எதிர் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

★ காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் எதிர் நெடுந்தீவு மகா வித்தியாலயம். (5-86)

## உதைபந்தாட்ட பயிற்சி நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம் ஒக்.11

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் பலகோடி ரூபா செலவில் கொழும்பில் நிர்மாணிக்கப்பட்ட பொத்தகான் உதைபந்தாட்டப் பயிற்சி நிலையம் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு ஜீவன் குமாரதுங்க கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் முகமட் பின் ஹமாம் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளன செயலாளர் பீட்டர் வேலப்பன் ஆகியோர் கலந்துகொள்வர். (3-1-90)

## மாலதி ஞாபகார்த்த

# உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.12

2 ஆம் லெப்.மாலதி ஞாபகார்த்தமாக மகளிருக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகியது.

2 ஆம் லெப். மாலதி ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்பட்ட மகளிருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட பெண்கள் அணியும் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணியும் மோதின. இதில் யாழ். மாவட்ட அணி 7-0 என்ற கோல் கணக்கில் வென்று மாலதி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

இந்தச் சுற்றுப்போட்டியில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா, திருமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றின. (8-5-190)

# விநியோக ஊழியர் தேவை

எமது யாழ். அலுவலகத்திற்கும் கிளிநொச்சி அலுவலகத்திற்கும் இடையில் நாளாந்தம் பத்திரிகை விநியோகம் செய்ய விநியோக ஊழியர் தேவை.

★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
★ மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் அவசியம்.
★ கடமை நேரம்: காலை 4.30 தொடக்கம் 12.30 வரை.
★ காலை உணவுக்கான கொடுப்பனவு வழங்கப்படும்.
★ யாழ். மாநகர எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(சி-38156)(18-32-13)

விரும்புவோர் அலுவலக நேரத்தில் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**மனிதவள சேவை**
**உதயன் பணிமனை**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**PC UPGRADE**





Pentium I, Pentium II, Pentium III, Cyrix MI/MII, AMD

முதலீடு ரூ.22,500 மட்டுமே

Intel P4 / Celeron 2.0 Ghz

- உங்கள் கணனிகளின் பரிசீலனை இலவசம்
- உங்கள் அலுவலகத்திற்கு அல்லது வீட்டிற்கு நேரடியாக எமதுதொழில்நுட்பவியலாளர்கள் வந்து கணனியை பரிசீலனை செய்யும் வசதி

**MICRO PC SYSTEMS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 Kasturiyar Rd, Jaffna. Tel: 021 2225893, 071 2374181 |
| நெல்லியடி | Main Street,(Next to Police Station) Nelliyadi. Tel: 077 3039536 |
| வெள்ளவத்தை | 15. 36th Lane, Colombo-06 Tel: 011-4513235, 011-4516764 |
| கொட்டாஞ்சேனை | 82, New Chetty St, Kotahena, Tel: 011-4613617, 011-4619673 |


## உளமார வாழ்த்துகின்றோம்



யாழ். ஏழாலை மேற்கு
சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவியும்,
செல்வரத்தினம் - உதயகமலம் தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வியுமாகிய
செல்வி **தேனுகா**
அவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு மனமார வாழ்த்துவதோடு, அவர் கல்வியில் மேலும் சிறக்க எமது நல்லாசிகளையும் தெரிவிக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
*மாமன்மார்:* க.தயாளன், க.தயாபரன், க.தயாநிதி, க.தயாகரன், க.தயானந்தன், க.தயாநளன், கு.யோகேஸ்வரன், கு.ரூபன், கு.ரீகன், ர.நகுலன், ர.நிருபா, தி.உதயகுமார்.
*சித்தப்பாமார்:* வை.விஜிதரன், வை.ரஜிதரன், இ.இந்துஜன், இ.இதயராஜ், இ.இனோஜன்.
*அண்ணாமார்:* செ.மதனரூபன், செ.ஜெயரூபன், செ.திலீபன், செ.விஜிதரன், செ.தர்சன், கு.உசாந்தன்.
*தம்பி:* ச.மிதுன்.
*மச்சான்மார்:* த.தமிழவன் (லண்டன்), ரா.கோபிசாந், ரா.அபிசாந், த.தருண்.

வளர்மதி வீதி, கைதடி மத்தி. (37477) (34-18-32-13)

உ

**சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான**

## நவராத்திரி விழாவும், கேதாரகௌரி விரதமும்



*அம்பிகை அடியார்களே!*
நவராத்திரி விழா ஆரம்பம்:
14.10.2004 வியாழக்கிழமை
பிற்பகல் 3.00 மணி
சரஸ்வதி பூஜை:
20.10.2004 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி

விஜயதசமி - மானம்பூ உற்சவம்,
கேதாரகௌரி விரதாரம்பம்
23.10.2004 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி

*அனைவரும் வருக! அன்னை அம்பாள் அருள்பெறுக!!*

☞ தூர இடங்களிலிருந்து வருகின்ற அடியார்களின் வசதிகளை முன்னிட்டு கௌரி விரதம் 20 நாள்களும் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.
21 ஆம் நாள் காலை 8 மணிமுதல் தொடர்ந்து நடைபெறும்.

(37469)(34-32-18-13) - **தர்மகர்த்தா**

## காவலரண் எரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.12

சாவகச்சேரி சங்கத்தானை ரயில் நிலைய மேடையில் அமைக்கப்பட்டிருந்த படையினரின் காவலரண் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டுள்ளது.

ரயில் நிலைய மேடையில் இருந்த காவலரண் முன்னர் எரிக்கப்பட்டதையடுத்து தற்காலிக கொட்டில் அமைக்கப்பட்டு காவலரண் இயங்கிவந்தது.

இரவு படையினர் இல்லாத வேளையில் காவலரண் எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-117)

## உணவில் நஞ்சு மூவர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,ஒக்.12

முதல்நாள் சமைத்த ஆட்டிறைச்சிக் கறியை மறுநாள் காலை உண்ட மூவர் வாந்தி, சோர்வு என்பவற்றின் தாக்கத்திற்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வண்ணார்பண்ணைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் என்.சிவராசா (வயது 43) அவரது மனைவி சிவராசா ஞானமலர் (வயது 40) அவர்களது மகன் சிவராசா திருவரங்கன் (வயது3) ஆகிய மூவருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

உணவில் ஏற்பட்ட நஞ்சுத்தன்மையாலேயே இது ஏற்பட்டதாக வைத்திய வட்டாரத்தில் கூறப்பட்டது. (3-7-15)

## வெளிவாரி பிரிவின் முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பிரிவின் கலைமாணி 2000 பட்டம் பெறுவோரின் 2ஆவது பட்டியல் வெளியாகியுள்ளது.

மாணவர்கள் பெறுபேறு தொடர்பான விவரங்களை தமது பிரிவு விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என வெளிவாரி பிரிவு உதவிப் பதிவாளர் தெரிவித்தார்.

மாணவர்கள் பெறுபேற்றுச் சான்றிதழ்களை இன்று தொடக்கம் வெளிவாரிப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். (3-204)

## படுகொலை நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

கடந்த 1987 ஆம் ஆண்டு கொக்குவில் பகுதியில் இந்திய இராணுவத்தினரால் கோரமான முறையில் படுகொலைசெய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 17 ஆம் ஆண்டு நினைவு தினம் நாளை காலை 9மணிக்கு மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீர்தரன் தலைமையில் கொக்குவில் பிரம்படி வீதிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலி இயக்கப் பிரமுகர்கள், கல்விமான்கள் கலந்துகொண்டு நினைவுரையாற்றவுள்ளனர்.(3)

## லொறி தடம்புரண்டு ஒருவர் படுகாயம்

தென்மராட்சி,ஒக்12

கைதடிப் பாலத்தில் பார ஊர்தி தடம்புரண்டதில் பயணம் செய்த ஒருவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவத்தில் பளை கச்சாய்வெளியைச் சேர்ந்த சிவபாதம் குணபாலசிங்கம் (வயது29) என்பவர் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (3-117-31)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

சென்.ஜோன்ஸ் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவற்றின் உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (5-190)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினர் நடத்துகின்ற கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவிரும்பும் அணியினரின் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினர் யாழ்.மாவட்ட ரீதியாக ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றினை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் அணியினர் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பங்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது. (3-5-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 – 03 – 1927 | | 13 – 09 – 2004 |



அமரர்
**ஆறுமுகம் றொபேட் பேரின்பநாயகம்**

*அன்புக்கோர் இலக்கணமாய் பண்புக்கோர் இருப்பிடமாய்*
*இப்புவியிலே வாழ்ந்து மறைந்த எமது அன்புத் தெய்வமே!*
*மனிதருள் மாணிக்கமாய் புனிதவாழ்வு வாழ்ந்தீர்!*
*உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.*

நாளை (13.10.2004) புதன்கிழமை முற்பகலில் அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டி நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"ஞானந்தோட்டம்",*
*புலோலி தெற்கு, புலோலி.*
(சி-38152)(34-32-13-18)

மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

## நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 – 04 – 1930 | | 24 – 09 – 2003 |



**அமரர் இளையதம்பி தருமலிங்கம்**
திதி: 12.10.2004

*ஆண்டொன்று சென்றாலும் அணையாத எங்கள் குலவிளக்கே!*
*உனது நினைவுகளை எம்மைச் சுமக்க வைத்துவிட்டு*
*நிழலாகிப் போன மாயமென்ன? நிரந்தரமில்லா வாழ்க்கையில்*
*நிஜமானது இறையடி என்றா சென்று விட்டாய்?*
*பாவிகள் நாங்கள் பரிதவித்து நிற்கின்றோம்.*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

*6 ஆம் வட்டாரம்,*
*மண்டைதீவு.* (37467)(42-32-18-13)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

| முத்தாக | | வித்தாக |
|---|---|---|
| 22 - 10 - 1954 | | 26 - 10 - 2000 |



திருமதி **கலைமணி இராசதுரை**

*அம்மா அம்மா எங்கள் தெய்வமே!*
*ஆயிரம் உறவுகள் இருந்தாலும்*
*அம்மா உங்கள் அன்புக்கு ஈடாகுமா?*
*ஆசையுடன் எமை வளர்த்து*
*அறிவுரைகள் பல கூறி*
*நல்வழியில் வாழ வழிகாட்டி*
*இன்று தனியே பரிதவிக்கவிட்டு விட்டு*
*எங்கேயம்மா சென்றீர்கள்? ஏனம்மா*
*ஒரு கணமேனும் எங்களைக் காண*
*ஓடோடி வரமாட்டீர்களா? அம்மா!*
*எங்களை எல்லாம் ஏங்கித் தவிக்கவிட்டு*
*ஒரு நொடியில் எங்கே சென்றீர்கள்?*
*எத்தனை ஆண்டுகள் சென்றாலும்*
*மாறாது உங்கள் நினைவு*
*என்றும் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய*
*தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் வாடும்:
குடமியன், வரணி. (37473) (34-32-18-13) - **குடும்பத்தினர்.**

## பெரிய கடையில் மாதர் சங்க மருத்துவ முகாம்

யாழ்.பெரியகடை மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் மாதர் சங்கத் தலைவி திருமதி இந்திராணி தலைமையில் கடந்த 5ஆம் திகதி கன்னாதிட்டி வீதியில் நடத்தப்பட்டது. ஜே-80 பிரிவு கிராம அலுவலர் எம்.கே.ரட்ணராஜா, குடும்பநல உத்தியோகத்தர் திருமதி பரஞ்சோதி ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். முதியோர் தினத்தை ஒட்டி நடத்தபபட்ட இந்த முகாமில் 40 வயோதிபர்களுக்கு அங்கு மருத்துவப் பரிசோதனை இடம்பெற்றது.

## கண்ணீர்க் காணிக்கை

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய
ஆசிரியை திருமதி சுதாமதி கேதீஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தை

### அமரர் முருகர் இராசரத்தினம்

அவர்கள் 09.10.2004 இல் சிவபதமடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
(37488)(29-14-16-43) யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் பட்டதாரி பயிலுநராகப்
பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் எமது நிலைய உறுப்பினர்
யசோதாவின் தந்தை

### சின்னத்தம்பி அரசரட்ணம்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு
(37483)(2914-16-43) பட்டதாரி பயிலுநர்கள் (யாழ்.இந்துக் கல்லூரி).

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 22 - 04 - 1949



விண்ணுலகில் 25 - 09 - 2003

### அமரர் மார்க்கண்டு விஜயகாந்தன் (வவா)

வேலணை முதலாம் வட்டாரம்)
(இலங்கை வங்கி மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம்)

சுற்றங்கள் சூழ வாழ்வில் நிறைவோடு வாழ்ந்தீர்!
குடும்பச் சுமையைச் சுகமாகவே நீர் சுமந்தீர்!
நெஞ்சம் முழுதும் இன்று நிறைந்தே இருக்கின்றீர்!
எம்மைத் தவிக்கவிட்டு எங்குதான் சென்று விட்டீர்?
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

32 /1, குமாரசாமி வீதி,
கந்தர்மடம். (37493)(29-14-16-43) அன்பு மனைவி, பிள்ளைகள்.

## நான்காம் ஆண்டு நினைவலைகள்





அமரர்
கணபதிப்பிள்ளை
யோகலிங்கம்
மண்மகிழ
05-11-1948

செல்வி
தமிழரசி
யோகலிங்கம்
மண்மகிழ
23-05-1975

கண்நெகிழ : 26-09-2000

திதி;-சதுர்த்தசி (12-10-2004)

கொடிய ஷெல் அரக்கனின்
கோரத் தாண்டவத்தால்
உள்ளத்தை உறைய வைத்தெம்
உறவுகள் பறந்தோடி
ஆண்டுகள் நான்கும் ஆனதோ........?
நான்கல்ல நாநூறு சென்றாலும்
ஆறாது எம் துயரம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சந்தை வீதி,
கொடிகாமம்.
T.P.No :0777252094
(37459)(43-14-16)
உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி காராளசிங்கம் (யப்பான்)

(முன்னாள் உரிமையாளர், ரவி ரயர் வேக்ஸ்)

காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி காராளசிங்கம் (யப்பான்) அவர்கள் கடந்த 10.10.2004 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (37497)(43-14-16)
தகவல்:
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் விவேகானந்தன்

(முன்னாள் ஊழியர், யாழ்.மாநகர சபை)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் விவேகானந்தன் கடந்த 08.10.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி சபாரத்தினம் சறோசினிதேவி தம்பதிகளின் அன்பு மகனும் ரட்ணதேவியின் அன்புக் கணவரும் ராஜகுமாரி (கனடா), பிறேமகுமாரி (ஹொலண்ட்), பிறேமாநந்தன் (ஹொலண்ட்), தர்சினி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மாதவன் (கனடா), செல்வச்சந்தன் (ஹொலண்ட்), வாசுகி (ஹொலண்ட்), சிறிகாந் (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் நிறோஷன், மேனகா, துஷ்யந்தன், அபிநயா, தக்ஷா, சோபனா ஆகியோரின் பேரனும் தங்கேஸ்வரி தறோசினிதேவி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12 மணியளவில் கோம்பையன்மணல இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்ப ள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடச ல வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
(37490)(43-14-16)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் அ.லக்ஸ்மன்
அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் கந்தையா அரசரட்ணம்

அவர்களின் திடீர் மறைவால் நாம் ஆழ்ந்த துயர் அடைவதுடன் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

(சி-38161)(29-14-16-43) - வளாக நண்பர்கள்.

The Royal College Of Jaffna
1000/= ரூபாவுடன் 3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கலாம்.
9.30 புதிய பிரிவு ஆரம்பம்.
பிளாக் வீதி, சங்கானை. (37486)

லான்மாஸ்டர்
விற்பனைக்கு
K-700, YAMMAR, AGRIMEC ரக லான்மாஸ்டர்கள் உடன் விற்பனைக்குண்டு. மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.
தொடர்புகளுக்கு:
இல.126, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P.: 0776120070,
0777396344
(37498)

ராஜா யாழ்ப்பாணம்
தனுஷ். சாயாசிங் நடித்த
திருடா திருடி
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 ,9.30
(சி-38041) (புதியநேரம்)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந், ஸ்னேகா மற்றும் பலர் நடிப்பில்
போஸ்
காட்சி நேரம் : 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே)
(C-37740)



நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய். சோனியா அகர்வால் வடிவேல் மற்றும் பலர் நடித்த
மதுர
காட்சி நேரம்:
11.00, 2.45,
6.00
(புதியநேரம்)
(ரீல்ஸ்)
(சி-37957)

சித்ரி சினிமா பண்டத்தரிப்பு
விஜய். ஜோதிகா. கிரண் நடிப்பில்
திருமலை
காட்சிகள் தினசரி 3.00, 7.00
சனி. ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(ரீல்ஸ)
(சி-37902)



லக்ஷ்மி சினிமா இணுவில்
சரத்குமார். ஆனந்தபாபு. விஜயகுமார். கவுண்டமணி. செந்தில் நடிப்பில்
சேரன்பாண்டியன்
காட்சிகள் தினசரி 11.00, 3.00, 7.00
(ரீல்ஸ)
(37456)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி அருளம்பலம

(தாவடி பெரியக்கா)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.45, அம்மன் வீதி, கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி அருளம்பலம் நேற்று (2004-10-11) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அம்பலவாணர் அவர்களின் அன்பு மகளும் நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருமதி தனலட்சுமியின் சகோதரியும் அருளம்பலம் (இளைப்பாறிய அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான்) அவர்களின் அன்பு மனைவியும் புவனேந்திரன் (சுவிஸ்), இராஜேஸ்வரி (விஞ்ஞான ஆசிரியர், யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), பத்மநாதன் (சுவிஸ்), சந்திரேஸ்வரி (அத்தியடி), சண்முகநாதன் (கனடா), திலகேஸ்வரி (பிரான்ஸ்), வசந்தராஜன் (நோர்வே), சூரியகுமார் (சுவிஸ்), சந்திரகுமார் (H.N.B., வவுனியா, அகில இலங்கை சமாதான நீதவான்), கனகாம்பிகை (ஜேர்மனி), ஞானாம்பிகை (சங்கீத ஆசிரியர், யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காஞ்சனமாலா (சுவிஸ்), காலஞ்சென்ற புவனராஜகுகன் (தெல்லிப்பழை), சரோஜினி (சுவிஸ்), பாலசிங்கம் (அத்தியடி), அஜந்தி (கனடா), குலசேகரம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (நோர்வே), மகேஸ்வரி (சுவிஸ்), நாகேஸ்வரி (வவுனியா), ஜெகதீஸ்வரன் (H.N.B., யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும் திருமதி அபிராமி, கிஷான், காலஞ்சென்ற அனந்தன், சிவாகினி, சுபாகினி, பார்க்கவி (சுவிஸ்), கோபிநாத் (கனடா), ரோகிணி, பிரவீன், பிரசாந (கனடா), ஆரணி (பிரான்ஸ்), சரவணன், மயூரன், துர்க்கா (நோர்வே), பகலவன் (சுவிஸ்), கீர்த்திகா, தர்ஷனா, திலக்ஷன் (வவுனியா), ஜேசுதன், தர்சன், தர்சினி (ஜேர்மனி), ஆரபி, சாம்பவி ஆகியோரின் அன்புப் பேர்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45,கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 5229
(37489)(29-14-16-43)
தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி சின்னத்துரை நேசம்மா



கோப்பாயைப் பிறப்பிடமாகவும், மட்டுவிலை வசிப்பிடமாகவும் திருநெல்வேலியைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை நேசம்மா நேற்று (11.10.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னத்துரையின் அன்பு மனைவியும் அமரர்களான தம்பித்துரை, அருளம்மா மற்றும் திருநாவுக்கரசு, திருமேனி, பூபதி ஆகியோரின் சகோதரியும் அமரர்களான சுப்பிரமணியம், நவரட்ணம், பத்மாவதி மற்றும் மகேஸ்வரி (பிரான்ஸ்), தங்கராஜா, நாகம்மா, பரமேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவயோகம், மகேஸ்வரி, மயில்வாகனம் (பிரான்ஸ்), பவளராணி வைகுந்தநாதன் (அமரர்), சண்முகநாதன், பாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2004) செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தகவல்:
சி.தங்கராஜா (மகன்).
(37499)(43-14-16)

### திருமதி பொன்னர் நாகம்மா



பலாலியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், வரியப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னர் நாகம்மா அவர்கள் நேற்று (11.10.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிராசா, சிவராசா மற்றும் சறோஜா, யோகராணி, செல்வராணி (சுவிஸ்), வசந்தராணி (பிரான்ஸ்), நாகராசா (ஹொலண்ட்), யோகராசா (ஹொலண்ட்), பாமராசா (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவலோகநாயகி, சந்திராதேவி, காலஞ்செனற செல்வரத்தினம் மற்றும் நாகரத்தினம், வீரசிங்கம் (சுவிஸ்), நிர்மலாதேவி (ஹொலண்ட்), அஞ்சலி (ஹொலண்ட்), சித்திரா (ஹொலண்ட்), ராமதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.10.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரியப்புலம்,
சுன்னாகம்.
(37494)(43-14-16)
தகவல்:
குடும்பத்தினர்.

### கனகசபை சபாரத்தினம்



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகசபை சபாரத்தினம் அவர்கள் 07.10.2004 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கமுத்து தம்பதிகளின் புதல்வனும் லிங்கநாதன் (லண்டன்), சுசிலாதேவி (பிரானஸ்), பராபரிதேவி (இந்தியா), தர்மதேவி (பிரான்ஸ்), சிவசிறி (பிரான்ஸ்), தற்பரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் லிங்கேஸ்வரி (லண்டன்), பரஞ்சோதி (பிரான்ஸ்), செந்தில்நாதன் (இந்தியா), வன்னியசிங்கம் (பிரான்ஸ்), சிவச்செல்வி (பிரான்ஸ்), ஜெயசிறி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் செல்லம்மா, காலஞ்சென்றவர்களான திலகவதி, தில்லையம்பலம் மற்றும் மருதப்பு, பரமேஸ்வரி, திருஞானம், திருச்செல்வம், ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், செல்லையா மற்றும் நாகரெத்தினம், அன்னலட்சுமி, மயில்வாகனம், இராஜேஸ்வரி, பத்மாவதி, காலஞ்சென்ற சிறீகரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2004) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியகாரன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
தகவல்:
சகோதரர்கள்.
(37481)(43-14-16)

# தமிழ்ப் பாடசாலைகளின் பிரச்சினைகள்; பேச்சு நடத்த கல்வியமைச்சு அழைப்பு!

## தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 15 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக நாளை புதன்கிழமை கல்வியமைச்சில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் இதற்கான அழைப்பை நேற்று தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த.மகா சிவத்திடம் விடுத்துள்ளார்.

தமது 15 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் தீர்க்கமான முடிவு தரப்படாவிடின் வடக்கு - கிழக்குப் பூராக பாரிய தொழிற்சங்கப் போராட்டமொன்றை முன்னெடுக்கவிருப்பதாகக் கடந்த முதலாம் திகதி கல்வியமைச்சிற்கு ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இசுருபாய கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு இக்கலந்துரையாடல் நடைபெறும்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சி.தண்டாயுதபாணி, பொதுச் செயலாளர் த.மகாசிவம், நிர்வாகச் செயலாளர் எஸ்.சரவணபவானந்தன், பிரசாரச் செயலாளர் விரி.சகாதேவராஜா உள்ளிட்ட சங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்கள் இச்சந்திப்பில் கலந்துகொள்வர்.

கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லுடன் பல உயரதிகாரிகள் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தொண்டர் ஆசிரியர்கள் நியமனம், ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் விவகாரம், இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியிடல், கடமை நிறைவேற்று அதிபர் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களை நிரந்தரமாக்கல், வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவை, இடைக்காலக் கொடுப்பனவு 3 ஆயிரம் ரூபாவை வழங்கல் உள்ளிட்ட 15 அம்ச விடயங்கள் தொடர்பாக இச் சந்திப்பில் ஆராயப்படவிருக்கிறது.

## பாழடைந்த வீட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம்களைக் கட்டுவன்வில்லில் இம்மார்க்கன் குழுவினரே படுகொலை செய்துள்ளனர். இக்குழுவினர் இப்படியான மிலேச்சத்தனமான செயல்களில் ஈடுபட்டு தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையே இன ஐக்கியத்தைச் சீர்குலைத்து சமாதானச் சூழ்நிலையைச் சிதைத்தழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இக்குழுவினரே ஸ்ரீலங்கா இராணுவத்தின் பக்கபலத்துடன் வாகரை, மாங்கேணி பனிச்சங்கேணி ஆகிய பகுதிகளில் ஆங்காங்கே சிறுசிறு தாக்குதல்களை மேற்கொண்டவர்களாவர். இவர்கள்மேல் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடி திடீர்த் தாக்குதலால் கருணாவின் துரோகத்தனம் அனைவருக்கும் தெட்டத் தெளிவாகத் தெரியவந்துள்ளது.

சமாதானத்தை நேசிக்கும் அனைவரும் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்க முயல்வோரை இனங்கண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருந்து சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் திடசங்கற்பம் கொள்வோம் - என்று உள்ளது.

நேற்று அதிகாலை இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டபோதும் காலையிலேயே அப்பகுதி மக்கள் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். அதன் பின்னரே பொலீஸாருக்குத் தகவல் தரப்பட்டு அவர்கள் வந்து காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். உயிரிழந்த இருவரின் சடலங்களும் வெலிகந்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

சம்பவத்தில் காயமடைந்த ஐவரில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருந்ததால் அவர்கள் பொலன்னறுவை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து குறிப்பிட்ட தொகை ஆயுதங்கள் பொலீஸாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.


தீபாவளி வாழ்த்து மடல்கள்

எம்மிடம் அதி நவீன டிசைன்களில்

சீவார். தீபாவளி வாழ்த்து மடல்கள்

விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

கட்டிங் கார்டுகள், சினிமா நட்சத்திரங்கள், சுவாமிப் படங்கள், பூ கார்டுகள் பலவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

POST CARD 50/=, 100/=

Makkmilan Book Depot, No.3 Hospital Road, Jaffna.

Sri Kantha Book Depot, No 165, Power House Road, Jaffna.

(ச-38011) (29-16-17)



தொழிற்பயிற்சிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலை வாய்ப்பைப் பெறக் கூடியவாறு பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

** RADIO, T.V., VIDEO DECK REPAIRING (காலம் 10 மாதங்கள்)

** MOTOR REWINDING AND ELECTRICAL WIRING (காலம் 07 மாதங்கள்)

** REFRIGERATION AND AIRCONDITIONING (காலம் 07மாதங்கள்)

** MOTOR CYCLE, WATER PUMP MECHANISAM (காலம் 06 மாதங்கள்)

** DIPLOMA IN ELECTRICAL & ELECTRONIC TECHNOLOGY (காலம் 12 மாதங்கள்)

** ENGLISH CLASSES FOR SCHOOL LEAVERS AND OFFICE STAFF (SPOKEN WITH BASIC GRAMMAR)

புதிய பயிற்சிகள் ஆரம்பம் :

18.10.2004 திங்கள் (கிழமை நாள்களில்)

23.10.2004 (சனி, ஞாயிறு நாள்களில்)

உத்தியோகத்தர்களுக்கான மாலைநேர வகுப்புகள் நடைபெறுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

இல.07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 -222 3335, 077 3086716 (37441) (29-16-17)


# சு.க எம்.பிக்கள் அனைவருமே அமைச்சர்களாகினர்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 4 பிரதி அமைச்சர்களின் பதவிப்பிரமாண நிகழ்வு நேற்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

மகளிர் விவசாய சமூகநலப்பிரதி அமைச்சராக எஸ்.எம்.சந்திரசேன, தொழிலுறவு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதியமைச்சராக மேர்வின் சில்வா, நிவாரணம் பிரதி அமைச்சராக த.மு.தஸநாயக்க, சிறிய நடுத்தர கைத்தொழில் பிரதியமைச்சராக ஹுசைன் அஹமட் பைலா ஆகியோர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

நாடாளுமன்றத்தில் அரசுக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் எம்.பிக்கள் மொத்தம் 60 பேர்.

நேற்றைய பிரதி அமைச்சர் நியமனத்தோடு அந்த 60 பேரில் விஜயதாஸ ராஜபக்ஷ என்ற எம்.பியைத்தவிர ஏனைய அனைவரும் அமைச்சர்கள் அல்லது பிரதி அமைச்சர்களாகிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமனம் பெற்ற பின்னர் அரசுத்தரப்புக்கு 'பல்டி' அடித்த ஹுசைன் அஹமட் பைலாவுக்கும் தற்போது பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

## மேல்மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். சடலம் தற்போது களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கொள்ளுப்பிட்டிப் பொலீஸார் புலன்விசாரணைகளை நடத்திவருகின்றனர். இந்தக் கொலைக்கான காரணம் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை. (க-3)

## தமிழ்க் கூட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனகசபை ஆகியோர் கண்டிக்குச் சென்றிருந்தனர்.

அவர்களின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டி தலதா வீதியில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. பொலீஸார் பின்னர் அந்தக் கொடிகளை அகற்றினர்.

அவர்கள் காலை 10 மணிக்கு மல்வத்தை பீடத்துக்குள் சென்று பீடாதிபதி வண.திப்பட்டுவாவே சித்தார்த்த ஸ்ரீசுமங்கள தேரரைச் சந்தித்துப் பேசினர். அவர்கள் உள்ளே பேசிக்கொண்டிருக்கும் போதே மல்வத்தை வளாகத்துக்குள் நுழைந்த சுமார் 50 பேர் வரையிலானோர் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுடன் ஹெல உறுமயக் கட்சியின் 15 பிக்குகளும் சேர்ந்துகொண்டனர்.

அவர்கள் புலிகளுக்கு எதிரான கோஷங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியிருந்தனர். "புலிகளின் பிரதிநிதிகளே தலதா மாளிகைத் தாக்குதலுக்குப் பகிரங்க மன்னிப்புக் கேளுங்கள்!", "மல்வத்தையில் உங்களுக்கு என்ன வேலை?", "நாட்டைப் பிரிக்க அனுமதிக்கமாட்டோம்" போன்ற கோஷங்களையும் அவர்கள் உரக்கக் கத்திக்கொண்டிருந்தனர்.

அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சமயம் மல்வத்தைபீட வளாகத்திற்குள் இருந்து ஒரு செங்கல் அவர்களை நோக்கி வந்து வீழ்ந்தது. இதனால், அங்கு திடீரெனப் பதற்றம் பரவியது. எனினும், அசம்பாவிதங்கள் எவையும் நிகழவில்லை.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மகாநாயக்கருடான சந்திப்பை முடித்துக்கொண்டு திரும்பிய தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் வெளியேற முடியாது அரை மணி நேரத்துக்கு மேல் உள்ளேயே காத்திருக்கவேண்டி ஏற்பட்டது.

அவர்கள் வெளியேறிச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கண்டிப் பொலீஸ் அத்தியட்சகர் செய்து கொடுத்தார். மூன்று வாகனங்களில் கூட்டமைப்பினர் வெளியேற முயன்றதும் ஆர்ப்பாட்டக்காரர்களில் இருவர் வாகனங்களுக்கு முன்பாகப் படுத்துக்கொண்டனர். ஏனையவர்கள் வாகனங்களைச் சுற்றி வளைத்து கண்ணாடிகளில் அடித்தும் குடைகளால் குத்தியும் கத்தியும் ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்னர், பொலீஸார் அவர்களைப் பிடித்திழுத்து அப்புறப்படுத்தினர்.

தமிழ் எம்பிக்களின் வருகையையொட்டி நேற்றுக் காலையே கண்டி நகரில் முக்கிய இடங்களில் பொலீஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. ஜாதிக ஹெல உறுமயவினரும் ஜே.வி.பியின் ஹுத்தேசி (நாட்டுப்பற்றாளர்) அமைப்பினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்ற செய்தி கிடைத்ததும் பொலீஸார் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும், அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை பெரிய அளவில் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-க-3-6)


NEW SCIENCE CENTRE.

யாழ்நகர்

வெளிமாவட்ட மாணவர்களிற்காக

CHEMISTRY DAY CLASS பிரிவு II

→ துரித மீட்டல் → கடந்தகால வினாக்கள்

→ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்

→ மாதிரி வினாக்கள்

→ 20 இற்கு மேற்பட்ட கருத்தரங்குகள்

ஆரம்பம்: 13.10.2004 புதன் 12 மணி

By: அன்பழகன் B.Sc. (ச-38138) (29)


# 10 இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மீனவர்கள் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் நேற்றிரவு ஆஜர்செய்யப்பட்டனர். இவர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

## சிங்கள அமைப்பு அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலையிலிருந்து மாவும், ரோக்கியோ சிமெந்து ஆலையிலிருந்து சிமெந்தும், திருகோணமலை சீனக்குடா எண்ணெய்க் குதங்களிலிருந்து இந்தியன் ஒயில் நிறுவனத்தின் எரிபொருள்களும் திருமலை மீனவர்களின் மீன் போன்றவையும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிப்பது பாதிப்புறும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேநேரம், திருகோணமலைக்கு பிற இடங்களிலிருந்து பொருள்கள் எடுத்துவரப்படுவதும பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது.

மேற்படி இரு ஊர்காவல் படையினரையும் விடுவிக்கக்கோரி அவர்களின் உறவினர்கள் நேற்றுடன் 28 ஆவது நாளாகவும் திருகோணமலை மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு அருகே சுழற்சி முறையில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-க-3)

## கரகாட்டம், கும்மி, காவடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கினை வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் இ.சிவானந்தன், யாழ்.கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா, யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், மூதறிஞர் சொக்கன் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் உட்படப் பலர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது பெற்ற மு.கனகசபை, பி.ஸ்ரனிஸ்லஸ், அரியான் பொய்கை செல்லத்துரை, கே.எஸ்.சிவகுமாரன், இரா.சடாட்சரதேவி (குந்தவை) மற்றும் எஸ்.எல்.எம்.ஹனிபா ஆகியோர் பேராசிரியர் கா.சிவத்தம்பி, பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் ஆகியோரால் பொன்னாடை போர்த்து விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் கா.சிவதம்பி பற்றிய ஆவண ஒளிப்பேழை வெளியிடப்பட்டது.

இறுதியாக இசைவாணர் கண்ணன் குழுவினரின் 'கிழக்கும் மேற்கும் இசைச்சங்கமம்' நிகழ்ச்சியும் யாழ்.பாரம்பரிய மேம்பாட்டுக் கழகத்தினரின் நாடக மேடைப் பாடல்கள், உரும்பிராய் கலைக் கோயில் கலாலயத்தின் நெறியாள்கையில் 'சீதா அபகரணம்' நாட்டிய நிகழ்வு என்பன இடம்பெற்றன. (ஐ-5-7-203-202)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 03 - 03 - 1908



மறைவு 12 - 09 - 2004

அமரர் அம்பலவாணர் செல்லையா

(முன்னாள் அதிபர், வேலணை சரஸ்வதி வித்தியாலயம், முன்னாள் கிராமசபைத் தலைவர் - வேலணை)

எமது குடும்பத்தின் குலவிளக்காகத் திகழ்ந்து எம் எல்லோர் வாழ்விலும் ஒளி விளக்கை ஏற்றிவைத்து எம் அனைவரது வாழ்வையும் பிரகாசிக்கச் செய்து சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்ற எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

12.09.2004 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து எமது துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தியைத் தெரிவித்தவர்களுக்கும் மலர்மாலை சூட்டி அஞ்சலித்தோர்களுக்கும் சகல விதத்திலும் எமது துயரைப் போக்கியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (12.10.2004) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து பம்பலப்பிட்டி தொடர்மாடி சமூக நிலைய மண்டபத்தில் (Community centre Hall) நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றி அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைத்து உள்ளங்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இல.101/1, வெவசெட் பிளேஸ்,
(Vaverset Place)
வெள்ளவத்தை, கொழும்பு.
T.P. 0777-896276 (ச-38042) (29-14-17) -குடும்பத்தினர்.



மரண அறிவித்தல்

நாகமுத்தர் ஐயாத்துரை

(ஓய்வுபெற்ற வைத்திய ஊழியர்)

நெடுந்தீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்தர் ஐயாத்துரை (ஓய்வுபெற்ற வைத்திய ஊழியர்) நேற்று (11.10.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் யோகேஸ்வரி, பேரினபநாயகி, மலர்விழி (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் சிவகுமாரன் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), உமா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற முருகேசு, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சின்னம்மா, கிறேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பகிரதன் (லண்டன்), தியாகரன், துளசிதரன், சங்கீதா, டுசிதா, வருணன், அருள்மொழி ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.சிவகுமாரன்
(மருமகன்).

நெடுந்தீவு -10. (ச-38160) (29-14-17)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.